பக்கங்கள் 10

Registered as a Newspaper

சஞ்சீவி

விலை ரூபா
2-50

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

மலர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ௵ பங்குனி ௴ 27௳ சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 21 (09-04-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 06

88 A/L
Paper Classes
(Sat & Sun)
Physics - திரு வர்ணம்
Chemistry- திரு. தில்லை
Botany -திரு குகாதரன்
Zoology -திரு.நாகநாதன்
NEW MASTER
INSTITUTE,
241,NAVALAR ROAD,
JAFFNA.

88 A/L
Paper Classes
(Sat & Sun)
9. 30 - Botany
10. 30 - Zoology
11. 30 - Chemistry
12. 30 - Physics
NEW MASTER
INSTITUTE
241, NAVALAR ROAD
JAFFNA.

கருத்துக் கலசம்

புதியன புகுதல்

புதியன புகுதலும் பழையன கழிதலும் மனிதனின் மரபு. புதியது ஒவ்வொன்றும் ஒருக்கால் பழையது ஆவது நிச்சயம். எனினும் புதியதை விரும்பி பழையதைத் தள்ளிவிடும் மனப்போக்கு பண்டு தொட்டு மனிதனுக்கு இருந்து வருகிறது.

பழையவற்றையே தொடர்ந்தும் செய்து கொண்டிருக்காமல், அல்லது அனுபவித்துக் கொண்டிருக்காமல் புதியவை படைத்து, புதுமைகள் புரிந்து புதிய அனுபவம் பெற வேண்டும் எனத் துடிக்கும் சுபாவம் உள்ளது மனித மனம்.

புதுமையில் பூரண பற்றுக் கொண்டவர்கள், பழைமையை முற்றாக மறந்து விடுகிறார்கள். அவற்றை ஒதுக்கி விட முனைகிறார்கள்.

புதிய வாழ்க்கைத் தத்துவங்களாயினும் சரி, விஞ்ஞானக் கோட்பாடுகளானாலும் சரி, புதிய கலாசாரங்கள், பண்பாடுகளாயினும் சரி, அவை பழைமையில் இருந்தே பிறக்கின்றன, உதிக்கின்றன என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

புதியனவற்றை வரவேற்கும் வேளை, புதுமைகளைப் படைத்திடும் வேளை, பழையனவற்றை, அவற்றின் மகத்துவத்தை, ஆழத்தை மறந்து விடுதல் ஆகாது

அந்தப் பண்பே மேலும் மேலும் புதியன செய்யவும், புத்தம் புதிய அனுபவங்களைக் காணவும் வழி செய்யும்.

பழையன கழிந்து புதியன கொள்ளும் வேளை, சீரும் சிறப்பும், மங்களமும் மாண்பும், மகிமையும் மதிப்பும் இன்பமும், இனிமையும், மலர்வும், மகிழ்ச்சியும் பிறக்க வேண்டும் என விரும்புவது மனித இயல்பு.

இன்னும் மூன்று நாட்களில் சித்திரைப் புத்தாண்டு மலர்கிறது. வசந்த காலத்தின் வாயிற்கதவுகள் திறக்கப் போகின்றன. மலரின் மணமும், தென்றலின் இதமும் மனித மனங்களில் மகிழ்ச்சியை, மலர்ச்சியை உண்டாக்கப் போகின்றன.

பிரபவ ஆண்டு ஈழத் தமிழர்களைப் பொறுத்த வரையில் பல சோதனைகளைத் தந்த ஆண்டாக அமைந்து விட்டது அது கழிந்து வரும் புதிய விபவ ஆண்டாகுதல் அமைதியும், சமாதானமும், ஐக்கியமும் தரும் ஆண்டாக மலர வேண்டும் என இறைவனை இறைஞ்சுவோமாக.

பழைய சோதனைகள் புதிய திருப்பங்களுக்கு வித்திட்டு, சீரும், வளமும், மன அமைதியும் விளைத்திட வேண்டுதும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

சொந்த லீவு தவிர்ந்த எந்த லீவும் இல்லை!

அரசாங்க ஊழியர்கள் விடயத்தில் அரசு கடும்போக்கு

கொழும்பு, ஏப்ரல் 9

அரசாங்க ஊழியர்களின் லீவு விடயத்தில், கடும் போக்கைக் கடைப்பிடிக்க அரசு தீர்மானித்துள்ளது.

அரச ஊழியர்கள் இனிமேல் தமக்குரிய சொந்த லீவு நாட்களைத் தவிர்ந்த வேறு எந்த லீவும் எடுக்க முடியாது.

அதாவது வருடாந்தம் 21 நாட்கள் சமயாசமய லீவும், 24 நாட்கள் விடுமுறை லீவும் மட்டுமே எடுக்க முடியும். வேறு எந்தவித காரணத்தைக் காட்டியும் லீவு எடுக்க முடியாது.

அவ்வாறு லீவுக்கு விண்ணப்பித்தால் அது சம்பளமற்ற லீவாகவே கருதப்படுமாம்.

இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திரு லலித் கமகே தயாரித்துவிட்டார் என்றும்— அது விரைவில் நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க அலுவலகங்களின் தலைமை அதிகாரிகளுக்கு அனுப்பப்படும் என்றும்— தெரியவருகிறது.

புதிய நடைமுறை உடனடியாக நடைமுறைக்கு வர வகை செய்யப்படும் எனவும் அறியவருகிறது.

வடக்கு, கிழக்கு உட்பட பல மாவட்டங்களில் அரச ஊழியர்கள் தமது சொந்த லீவு நாட்களான 45 நாட்களுக்கு மேலாகவும் கடமைக்குச் செல்லாமல் லீவு போடுகிறார்கள் என்றும்— அதனைத் தொடர்ந்தே இந்தக் கடும் போக்கைக் கடைப்பிடிக்க அரசு முடிவு செய்ததாகவும்— மிக நம்பிக்கையாகத் தெரிய வருகிறது.

(அ-1)

திருமலையில் நாளைமுதல் சாகும் வரை உண்ணாவிரதம்

திருகோணமலை, ஏப்.9

திருகோணமலை அன்னையர் முன்னணியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் சுழற்சிமுறையிலான உண்ணாவிரதம் நாளை 10ஆம் திகதிமுதல் சாகும் வரை உண்ணாவிரதமாக மாற்றப்படவுள்ளது.

திருமதி சுசிலா கணேசன் சாகும் வரைஉண்ணாவிரதத்தை ஆரம்பிப்பார்.

கடந்த மாதம் 9 ஆம் திகதி முதல் அன்னையர் முன்னணியினர் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சு வார்த்தை ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தஉண்ணாவிரதப் போராட்டம் இடம் பெறுகின்றது.

(ஒ-150)

இன்று முதல் யாழ்-திருமலை பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஏப் 9

வட பிராந்தியபோக்குவரத்துச் சபை இன்று முதல் யாழ் - திருமலை பஸ் சேவை ஆரம்பிக்கின்றது.

நீண்ட நாட்களாகஇச் சேவை இடை நிறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

தினமும் காலை 6.00 மணியளவில் யாழ் பஸ் நிலையத்திலிருந்து இச்சேவை ஆரம்பமாகும்.

(ஒ-10)

சுபநேரம்

9 - 4 - 1988
பங்குனி 27
சனிக்கிழமை
சுபநேரம்:
3.06 முதல் 4.36 வரை
ராகுகாலம்:
9.06 முதல் 10.36 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்.
பகல் 11.21 இன் மேல்
அட்டமி

வாந்திபேதி கட்டுப்பாட்டுக்குள்

யாழ்ப்பாணம், ஏப் 9

யாழ்-குடா நாட்டில் தற்பொழுது வாந்திபேதி கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த பெப்ரவரியில் வாந்திபேதி நோய் பரவத் தொடங்கியது இதனையடுத்து சுகாதாரத்திணைக்களத்தினர் மேற்கொண்ட தீவிர முயற்சிகளை அடுதது இந்

[10 ஆம் பக்கம் பார்க்க]

காணாமற் போனவர் ஒரு வருடத்தின் பின் இறந்தவராகிவிடுவார்

சட்டமூலம் நிறைவேறியது

கொழும்பு, ஏப். 9

ஒருவர் காணாமற் போன ஒரு வருடத்தின் பின்னர் அவரை இறந்துவிட்டார் என்றே கருத வேண்டும் என்று கூறும் சட்டமூலம் நடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டது

தற்போதுள்ள சட்டத்தின்படி ஒருவர் காணாமற்போன ஏழு ஆண்டுகளின் பின்னரே இறந்தவராகக் கருத முடியும்.

புதிய சட்டமூலத்தின் மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அத்தனகலை எம். பீ. லக்ஷ்மன் ஜயக்கொடி சொன்னதாவது:-

கடந்த மாதத்தில் மட்டும் தென் இலங்கையில் 184 பேர் கைது செய்யப்பட்டனர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனவர்களின் எண்ணிக்கை தெரியவில்லை.

அண்மையில் நீர்கொழும்பில் மூவரை நீதிமன்றம் விடு

[10ஆம் பக்கம் பார்க்க]

வவுனியாவுக்கு மேலதிக பஸ் சேவை

புத்தாண்டை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துசபை மேலதிக பஸ்களை ரயில் இணைப்பு சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

வவுனியா வரைக்குமான இந்த இணைப்புச் சேவை கோண்டாவில், காரைநகர், பருத்தித்துறை டிப்போக்களில் இருந்து தினமும் நடத்தப்படுகிறது.

[ஒ-க-9]

கிழிந்த 5 ரூபா, 2 ரூபா நோட்டுக்களை சில்லறையாக மாற்றலாம் அங்கே...!

யாழ்ப்பாணம், ஏப். 9

பழைய மற்றும் கிழிந்த ஐந்து ரூபா, இரண்டு ரூபா நோட்டுக்கள் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களில் மாற்றிக்கொடுக்கப்படும்.

இத்தகவலைப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஐந்து ரூபா அல்லது இரண்டு ரூபா நோட்டுக்களை மாற்ற விரும்புவோர் யாழ் கோட்டை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை. காங்கேசன்துறை. பலாலி ஆகிய இராணுவ முகாம்களில் சில்லறைக் காசாக மாற்றிப்பெற்று கொள்ளமுடியும் (ஒக-10)

தடைப்பட்ட ஜீ.சி.ஈ. பரீட்சை:

கிளிநொச்சி—முல்லை. மாவட்டங்களிலும் நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப் 9

தடைப்பட்ட ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் விசேட பரீட்சை நடத்தப்படும் பட்சத்தில் கிளிநொச்சி, முல்லை - தீவு மாவட்டங்களில் தடைப்பட்ட பகுதிக்கும் அந்தப் பரீட்சை நடத்தப்பட வேண்டும்.

இதனை வலியுறுத்தி நாமும் அரச அதிபர்களும் கல்வி அமைச்சுக்கும். பரீட்சைத் திணை

[10 ஆம் பக்கம் பார்க்க]

வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்டவர்கள்

நிவாரண உதவியைப்பெற கொழும்பு செல்லத் தேவை இல்லை!

யாழ்ப்பாணம், ஏப் 9

வடக்கு-கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் இனிமேல் அந்தந்த மாவட்டங்களிலேயே வழங்கப்படும் என அறியவருகிறது.

முன்னர் வடக்கு கிழக்கு பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களின் நிவாரண விண்ணப்பப் படிவங்கள் யாழ் செயலகம் ஊடாக புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

புனர்வாழ்வு அமைச்சினால் விண்ணப்பப் படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு நிவாரணத்தொகை கொழும்பிலேயே வழங்கப்பட்டு வந்தது.

பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பு சென்று நிவாரணம் பெறுவதில் பெரும் சிரமம் இருந்து வந்தது.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புனர்வாழ்வு அமைச்சுக்கு சுட்டிக் காட்டியதை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

(ஒ-க-10)

வடமராட்சியில் தேடுதல்

யாழ்ப்பாணம், ஏப் 9

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் நேற்று உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டு தேடுதல் மேற் கொள்ளப்பட்டது.

கடந்த வியாழன பருத்தித்துறை பகுதியில் இளைஞர் ஒருவர் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்தே தேடுதல் நடத்தப் பட்டதாகச் சொல்லப்பட்டது.

(ஒ-9)

சீசன் டிக்கெட்: நாளை கடைசி நாள்

யாழ்ப்பாணம், ஏப்.9

ஏப்ரல் மாதத்துக்கான பஸ் சீசன்டிக்கெட் நாளை பத்தாம் திகதி வரை மட்டுமே வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

செய்திச் சாரம்

அமைச்சு அதிகாரிகள் யாழ்.வந்தனர்

கொழும்பு, ஏப்.9

புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகள் சிலர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர்.

அவர்கள் காங்கேசன்துறை, பலாலி ஆகிய பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அவதானித்தனர்.

யாழ் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த அவர்கள் சேதமுற்று தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டுவரும் கட்டடங்களையும் அவர்கள் பார்வையிட்டதோடு படம் பிடித்தும் சென்றனர்.

(ஒ-10)

உடன்பாடு கைச்சாத்து

கொழும்பு, ஏப். 9

கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையே நேரடி விமானப் போக்குவரத்துக்கு வழி செய்யும் உடன்பாடு ஒன்று கொழும்பில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

பலாலி விமானநிலையத்தை வர்த்தக விமானப் போக்குவரத்துக்கு ஏற்றதாக அபிவிருத்தி செய்யவும் இந்த உடன்படிக்கை வழி செய்கின்றது

இந்தியா இன்னொரு நாட்டுடன் சேர்ந்து விமான சேவை நடத்த முன்வந்திருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

[ஒ-எ]

இந்தியப் படையினருக்கு 'இந்திரா'

சென்னை ஏப் 9

தாழ்வாகப் பறந்து செல்லும் விமானங்களைக் கண்டுபிடிக்கக் கூடிய "ராடர்" சாதனம் ஒன்றை இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அதற்கு இந்திரா என்று பெயரிடப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு டிசம்பரில் இருந்து இச்சாதனம் இந்திய பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்படும்.

[ஒ-எ

பொலீஸாரின் லீவுகள் ரத்து

பொலீஸாரின் லீவுகள் அடுத்த மாதம் ஐந்தாம் தி[illegible] ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான உத்தரவை பதில் பொலீஸ்மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா விடுத்திருக்கிறார்.

உத்தரவு எதிர்வரும் திங்கள் முதல் நடைமுறைக்கு வருகின்றது.

[ஒ-எ]

கம்பளை எம். பி. ராஜினாமா

கொழும்பு, ஏப் 10

கம்பளை எம் பி திரு. திஸநாயக்கா நேற்று ராஜினாமாச் செய்தார்.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை அவர் நேற்று நாடாளுமன்றத்தில் விடுத்தார்

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகவே எம் பி பதவியை ராஜினாமாச் செய்வதாக அவர் அப்போது தெரிவித்தார்.

திரு திஸநாயக்கா கண்டி மாவட்ட அமைச்சராகவும் பதவி வகித்து வந்தார்.

(ஒ-எ)

✯ ஓர் அரிய சந்தர்ப்பம்!
✯ தவற விடாதீர்கள்!!
கலர் படச்சுருள் கழுவுதல்
முற்றிலும் இலவசம்!
✶ பிரதி ஒன்று—4 . 75
✶ கொழும்பில் நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்யப்படுகிறது. மிகத் தரமானது.
★ 5முதல் 6நாட்களுக்குள் விநியோகம்.
✶ ஸ்ருடியோக்கள், 'ஷப்ரு' வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகையுண்டு
எல்லா நாட்களிலும் காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு:
SHABRA
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

புதுமையும் எழிலும் [illegible] பல்சுவை வார இதழ்

★ ஒன்னஞ் சிறு விளம்பரம் ★

விற்பனைக்கு

SONY VIDEO 8 PROGRAMME CCD-V 100 E புதியரக-வீடியோ கமரா உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- சிவா ஸ்ரோர்ஸ். 425, காங்கேசன்துறைவீதி. யாழ்ப்பாணம். (2756)

உசன் சந்தைக்கு அருகில் இறைமாவடி வளவு 11 பரப்பு தென்னங்காணி இறையக்கட்டுக்காடு 13½ பரப்புத் தென்னங்காணி இறையக்கட்டுக்காடு வீட்டுடன்கூடிய 8 பரப்புக் காணி ஆகிய மூன்று காணிகள் விற்பனைக்கு உண்டு தனித்தனி உறுதிகள் உண்டு. விபரங்களுக்கு நாதன் ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை, (2302)

கைதடிச் சந்தியிலுள்ள காணியும் மனை வளவும் (அம்பத்தை) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் G கோபாலசுந்தரம் 461, K.K.S Road, யாழ்ப்பாணம். அல்லது திருமதி P [illegible] பிள்ளை No 12, 10th Lane, Colombo-3 (2308)

யாழ் மக்களுக்குஅரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள். புதுவருடமலிவு விற்பனை (2-4-88 - 11-4-88 வரை)Shirt, Blouses, Frocks, Baby Frocks மற்றும் நவீன ரெடிமேட்ஆடைகள். Fashion Garments 227 Navalar Road, Jaffna [பெருமாள் கோவில் அருகில்] [2417]

Broilers இறைச்சிக்கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும் Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (2715)

சம்பியன் லேன் கொக்குவில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு 17, கோயில் வீதி, கிழக்குக் கொக்குவில் கைலைவாசனுடன் தொடர்புகொள்ளவும். (2333)

பாலர் கல்விப்போட்டி

பாலர் கல்விக் கழகத்தின் (தமிழ் ஆங்கிலம்) பேச்சு அபிநயம் பாட்டுப் போட்டிகள் மே மாத இறுதியில் நடைபெறவுள்ளது போட்டியில் பங்குகொள்ள விரும்பும் யாழ் வட்டத்திலுள்ள சகல பாலர் பாடசாலைகளும் முகவரியிட்ட 75 சத முத்திரை ஒட்டிய கவருடன் விண்ணப்பிக்கவும். செயலாளர்; பாலர் கல்விக் கழகம் 84 அரசடி வீதி. யாழ்ப்பாணம் (2719)

நூல்

சமூகக்கல்வி - ஆண்டு 10, 11 தேசப்பட வேலைக்குரிய வழக்கக் குறியீடுகள் உரிய நிறங்களோடு வெளிவந்துள்ளது. க. குணராசா (M A) தயாரித்தது ஸ்ரீலங்கா புத்தகசாலை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [2351]

சலுகை

[illegible]ஸ்ரார் வழங்கும் புத்தாண்டு சலுகை 20% கழிவு. உங்கள் கலர் பிலிம் சுருள்களை கழுவி பிரின்டிங் செய்து கொள்ளுங்கள். 163, நாவலர் வீதி யாழ்ப்பாணம். (2415)

தேவை

சிறிய வீடு விலைக்குத் தேவை. யாழ்ப்பாண முனிசிபல் எல்லைக்குள் விரும்பத்தக்கது. விலை விபரத்துடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இலக்கம் 106 உதயன்,யாழ்ப்பாணம். (2749)

ஒட்லி சிலிண்டர் மெஷின் மைண்டர், அச்சுக்கோப்பாளர்கள் பயிற்சிப் பத்திரிகையாளர்கள் உடன் தேவை. விபரங்கள் உடன் நேரில் வரவும் நர்நாடு இன்வெஸ்ற்மென்ற் புரொஜெக்ற் 194 A, K K S Road, Chunnakam (2336)

சமையலக்காரர் - நான்கு சம்பளம் 1200/-, வெயிற்றர் - நான்கு சம்பளம் 600/-, காசாளர் மூன்று பெண் அல்லது ஆண். கலக்ஸி ரெஸ்ரோறன்ற் 30, கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். (2334)

எனது ஸ்தாபனத்தில் சகல சாதிமக்கள் மணமக்களுக்கும் பதிவாகி இருப்பதினால் உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாடவேண்டிய இடம் ABDE விவாகப் பொருத்துனர் ஆனைப்பந்தி. (2331)

ஊதுபத்தி வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை உடன்தொடர்பு கொள்ளவும். தகுந்த ஊதியம் வழங்கப்படும். கோணேஸ்வரா ஸ்ரோர்ஸ், நுணுவில் சந்தி சாவகச்சேரி (2418)

English, C.I.M.A, A.A.T தபால் மூலம் கல்வி ஆங்கிலம் ஆறு மாதங்களில் சரளமாகப் பேசவும் எழுதவும் தமிழ் மூலம் கற்க முத்திரை ஒட்டிய கடிதவுறையுடன் தொடர்பு கொள்ள Sai Educational Trust 372. பருத்தித்துறை வீதி கல்வியங்காடு, யாழ்ப்பாணம் (2448)

மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பெற்றோர் U K. இல் பொறியியலாளராகத் தொழில் புரியும் (B Sc Engineer) 4 ஆம் வீட்டில் செவ்வாய் இருக்கும் மணமகனுக்கு U K இல் அல்லது கனடாவில் தற்சமயம் இருக்கும் மணமகளை தேடுகின்றனர் முழு விபரங்களுக்கும் விண்ணப்பிக்கவும்: C/o உதயன் 125. யாழ்ப்பாணம் (2416)

மணமக்கள்தேவை

யாழ் இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 28 வயது நிரம்பிய B sc ஆக்கிரேக் மணமகனுக்கும் இவர் சகோதரி வயது 25 நிரம்பிய I.C.M.A படிக்கும் மணப்பெண்ணுக்கும் மாற்று விவாகத்தையும் பெற்றோர் விரும்புகின்றனர். (2329)

மணமகள்தேவை

யாழ். இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 35வயது நிரம்பிய மாதம் 4 500 வருமானம் உள்ள சொந்தவீடு உடைய மணமகனுக்கு பெண் தேவை. மணமகனுக்கு கண்பார்வை குறைவு. தொடர்பு BCDF விவாகப்பொருத்துனர் 328, நாவலர் றோட் ஆனைப்பந்தி. (2030)

மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து உயர்குல வேளாள பெற்றோர் 35 வயதான பயிற்றப்பட்ட கணித ஆசிரியை மகளுக்குத் தகுந்த மணமகன் தேடுகிறார். வீடு உட்பட தகுந்த சீதனம் வழங்கப்படும். குறிப்புடன் முழு விபரங்களும் அனுப்பவும். விளம்பர இல 126 c/o உதயன், யாழ்ப்பாணம். (2440)

மணமகன் தேவை

இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 37 வயது உடைய அச்சுவினி நட்சத்திரத்தில் பிறந்த பட்டதாரி ஆசிரியைக்கு மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும் C/o உதயன் விளம்பர இலக்கம் 121 யாழ்ப்பாணம். (2371)

கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 19 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்கும் குறைந்த காலத்தில் நுணுக்கமான முறையில் கற்பிக்கப்படும். மற்றும் கொழும்பிலுள்ள பிரபல கல்லூரிகளில் பயின்ற ஆசிரியர்களினால் Spoken English சிறந்த முறையில் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு, ஒழுங்கை, சுண்டுக்குளி. (2321)

சோதிடம்

(19-6-88) வியாழமாற்றமும் 1988-89 விபவ வருஷ இராசிப்பலன்களும் ஆத்ம சோதி ''கல்கி வருகிறார்'' திருமாலின் இனிவரும் கல்கி அவதாரம். ஆனந்தரகசியம் விலை ரூ - 3/50 எங்கும் கிடைக்கும். சத்தியதாசன் (ஜோதிட நூலாசிரியர்) கமலா வாச்வேக்ஸ் காங்கேசன்துறை. (2309)

வகுப்பு

Spoken English G C E (O/L) நேரடி வகுப்புக்கள் புதிய பிரிவு சனி, ஞாயிறு மாலை 4 30 மணி, ஆரம்பம்: 20 - 4 - 88, ஆறு மாதப் பயிற்சி அச்சடித்த குறிப்புகள் வழங்கப்படும். Sai Educational Trust 372 பருத்தித்துறைவீதி, நல்லூர், மாக்கற், யாழ்ப்பாணம். (2337)

காணவில்லை

ஜெயந்தி ஆகிய எனது 705091005V அடையாள அட்டையை திருநெல்வேலிக்கும் கச்சேரிக்கும் இடைப்பட்ட இடத்தில் தொலைத்துவிட்டேன், கண்டெடுத்தவர்கள் பலாலிவீதி திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன். (2332)

தவறிவிட்டது

நல்லூர் சந்தஸ்வாமி கோவிலில் 1-4-88 வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தில் அன்று எமது முக்கியமான நகை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நிச்சயமாக சன்மானம் வழங்கப்படும். இல. 12, சங்கிலியன் வீதி, நல்லூர். (2772)

சேவை

ஒமேகா ஸ்தாபனத்தார் மின் உபகரணங்கள் திருத்துதல் றீவைண்டிங் செய்தல் ஆகியவற்றுடன் புத்தாண்டு முதல் குளிர் சாதனப்பெட்டி, எயர் கொண்டிசன் திருத்தும் வேலைகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கவுள்ளார்கள் Omega, Manipay Road, Jaffna. (2768)

போட்டோ ஸ்ரட்

யாழ்நகரில் தரமான ''போட்டோஸ்ரட்'' பிரதிகளுக்கும் தெளிவான 'ரோனியோ' வேலைகளுக்கும் சிறந்த முறையிலான தமிழ். ஆங்கிலம் 'ரைப்பிங்' வேலைகளுக்கும் என்றும் நம்பிக்கையான நிறுவனம் கிளீன்கட், இல; 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

ரோனியோ போட்டோ ஸ்ரற்

தரம் நாடுவோர் கவருது நம்மிடம் 'கிளீன் கட்'' தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளையும் தரமான ரோனியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் விரைவாகப் பெற்றுக்கொள்ள 'கிளீன் கட்'' 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்'

விற்பனைக்கு

சகலவிதமான பேட்டுக் குஞ்சுகள் சேவற் குஞ்சுகள் புரொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. முருகுந்தன் இன்டஸ்றீஸ் 75, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம், முருகுந்தஸ் பாம்ஸ் /சேச் லேன், மல்லாகம் (2182)

தவறிவிட்டது

491463600 V அடையாள அட்டையும் DL 116397 இலக்கமுடைய வாகன சாரதி அனுமதிப் புத்தகமும் தொலைந்து விட்டது. கண்டு எடுத்து ஒப்படைப்போருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும் க இரத்தினசிங்கம், ஐயனார் கோவிலடி மல்லாகம் [2301]

வகுப்புகள்

Radio, T.V. Air Conditioning. Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங், Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் Vispa Engineering Ad Hall, 32 நாவலர் வீதி. ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில் யாழ்ப்பாணம். [2217]

தேவை

[1] சமையல் பகுதியை பொறுப்பேற்று நடத்தக்கூடியவர் தேவை வயதெல்லை 30 க்கு மேல் [இருபாலரும் விண்ணப்பிக்கவும்][2] பிள்ளைகளை பராமரிக்கக் கூடியவர் தேவை வயதெல்லை - 30க்கு மேல் [இருபாலரும் விண்ணப்பிக்கவும்]

(3) 30 வயது கொண்ட மதகுரு ஒருவருக்கு 22 வயதுக்கு மேற்பட்ட மணமகள் தேவை. பெண் முக்கியர் இனத்தைச் சேர்ந்தவராய் இருத்தல் வேண்டும் தொடர்வு: [illegible]

பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா

	(வயது)
★ எயாப்போட் கிளீனேர்ஸ்	21-40
★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்	21-40
★ ஹொட்டல் வெயிற்றர்ஸ்	21-40
★ லேபரர்ஸ்	21-40

★ குவைத்

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)

தமிழ் முஸ்லிம் இருபாலாரும் உடனடியாக 5 படம் பாஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

★ குவைத்

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் வயது 17இலிருந்து 45வரை

சம்பளம் K.T. [illegible]0 டினார்.

2 மணித்தியாலம் மேலதிக வேலை

3 வருட ஒப்பந்தம்

சாப்பாடு. தங்குமிடம், வைத்தியவசதி எல்லாம் இலவசம்.)

★ சவூதி அரேபியா

எயாப் போட் கிளீனேர்ஸ்.

51 பேர் உடனடியாகத் தேவை குறைந்த கட்டணம். கட்டுப்பணம் 7500/-

ஒப்பந்தங்கள் 6 மாதங்கள் சம்பளம் 450 SR

யுனைற்றட் வழங்கும் மற்றுமொரு துரித சேவை. 3 தொடக்கம் 5 நாட்களுக்குள் குறைந்த செலவில் சிறந்த கொம்பியூட்டர் முறையில் கலர் பிலிம்ஸ் சுருள்களை கழுவியும் கொடுக்கப்படும்.

மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

யுனைற்றட்
இன்ரநஷனல் ஏஜன்சி
666, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை)

MERRI GOLD TOFFEES

தேனிலும் இனிமையும், அருஞ்சுவைகளும் நிறைந்தது
★ MERRI GOLD TOFFEES ★
வானவில்லைப் போன்று ஏழு வண்ணங்களிலும், ஏழு சுவைகளிலும் சுவை யூட்டுவது
★ MERRI GOLD TOFFEES ★
எங்கும் கிடைப்பது
★ MERRI GOLD TOFFEES ★
அன்னாசி ஆரஞ்சு, லெமன் Black Current, Peanut, Mint, Strawberry ஆகிய ஏழு சுவைகளையும் உங்களுக்குத் தருவது

Merri Gold Toffees

விநியோகஸ்தர்களும், கையிருப்பாளர்களும்:

Present Enterprises

(2130)

31ஆம நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
18 - 12 - 1906

மறைவு:
08 - 03 - 1988

திருமதி சிவபாக்கியம் சண்முகம்

அன்னையே அன்னையே எங்கள்
அம்மா, அப்பம்மா, மாமி
உங்களான்மா சாந்தி அடைய
அனுதினம் பிரார்த்திக்கும்:

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பளை,

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

[2342]

யா. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் - 1988

இடம்: யா/மகாஜனக் கல்லூரி - தெல்லிப்பழை
காலம்: 1988-04-10 ஞாயிற்றுக்கிழமை காலை 8மணி
தலைவர்: திரு க. நாகராசா அவர்கள்
[மகாஜனக் கல்லூரி அதிபர்]

மேற்படி கூட்டம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி வழமையான நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்.

ஆயுட்கால அங்கத்தவர் தவிர்ந்த ஏனைய அங்கத்தவர் தங்கள் சந்தாப் பணத்தைச் செலுத்தவோ, மதிய போசனத்தில் பங்குபற்றவோ விரும்பினால் சங்கப் பொருளாளருடன் கல்லூரியிற் தொடர்புகொள்ளலாம்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். நாட்டு நிலமை காரணமாகத் தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

திரு. க நாகராசா
தலைவர்
(2737)

திரு. நா தவநாதன்
திருமதி பா வாமதேவன
இணைச் செயலாளர்கள்.

Computer Programming and Data Processing Course

BASIC LANGUAGE

6 Months - Weekend

by

Qualified, Experienced and dedicated panel of lecturers and Instructors.

இன்று ஆரம்பம்

FEES - Rs. 1,500/-
(தவணை முறையிலும் செலுத்தலாம்.)

எமது குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals. பயிற்சி முடிவில் சித்திபெறுவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

HARVARD Institute

Successor of
CANTABIA INSTITUTE
Sister Organisation of
OXONIA, COLOMBO.
13, Rasavinthoddam Lane,
(ஸ்ரான்லி வீதி முடிவுக்கருகாமையில்)
Jaffna.

21 அம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:-
25 - 7 - 1922

மறைவு:-
20 - 3 - 1988

திரு. இ. த. கிருஷ்ணசாமி பத்தர்
[உரிமையாளர்:- கிருஷ்ணசாமி & சன்,ஸ் யாழ்நகர்.]

அன்பின் பிறப்பிடமே! நீங்கள் எமை விட்டுப் பிரிந்தாலும் உம் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது. உமது ஆத்மா சாந்தி பெற நல்லைக் கந்தனை இறைஞ்சுவோமாக.

இன்று [9-4-88] நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்துக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

641, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
[2773]

கிழவியிடம் பணம் திருடிய கிழவரை பொய்ப் பல்செட் காட்டிக் கொடுத்தது

ஒரு திருட்டு வழக்கில், குற்றவாளியைக் கண்டுபிடிக்க பொய்ப்பல்செட் முக்கிய தடயமாக உதவியது.

அமெரிக்காவில் புளோரிடா நகரத்தில் தொடர்பேடல் நோட்டை என்ற பகுதி உள்ளது. இங்கு 76 வயதுக் கிழவியிடம் இருந்து இரண்டு நாளுக்கு முன் ஒரு ஆசாமி பணத்தைப் பறித்துக் கொண்டு ஓடிவிட்டான். இந்தத் திருட்டு நடந்து சிலமணி நேரம் கழித்து, சம்பவம் நடந்த இடத்தில் பொலீஸாருக்கு ஒரு பொய்ப் பல்செட் கிடைத்தது.

இதை வைத்துக் கொண்டு குற்றவாளியை எப்படிக்கண்டுபிடிப்பது!

பழைய கேடிகள் லிஸ்டை எடுத்துப் பார்த்தனர். ஜோசப் பென்னட் என்ற 62வயது கிழவர் மீது சந்தேகம் வந்தது. அவரைத் தேடினர். ஒரு மதுபான விடுதியில் ஜோசப் இருந்தார். உற்சாக பான மயக்கத்தில் தள்ளாடிக் கொண்டிருந்த அவருக்கு எதுவுமே நினைவில் இல்லை. நான் எங்கேயும் திருடவில்லையே என்று உறுதியாகக் கூறினார்.

ஜோசப்பின் வாயில் பற்கள் இல்லாததைக் கவனித்த பொலீஸார், தங்களிடம் இருந்த பல்செட்டை அவர் வாயில் பொருத்தினர். சரியாக இருந்தது. எனவே பிரச்சினை எளிதில் முடிந்தது. ஜோசப் கைது செய்யப்பட்டார். இப்போது ஜாமீனில் வெளியே வந்துள்ள ஜோசப்புக்குப் பற்கள் கிடையாது. காரணம் அவருடைய பொய்ப் பல்செட், முக்கிய சாட்சி என்பதால் வழக்கு முடியும்வரை தரமாட்டோம் என்று பொலீஸார் கூறிவிட்டனர்.

பயங்கர மிருகம் - டைனோஸார்!

அவற்றின் சருகான முட்டைகள் கண்டுபிடிப்பு!!



Mamenchisauris இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததாகக் கூறப்படும் பயங்கரமான மிருகம் இது!

நம் வீடுகளில் காணப்படும் பல்லிகளின் மூதாதையர். டைனோஸார் இனத்தைச் சேர்ந்தது.

கிரேக்க மொழியில் 'டைனோ' என்று சொல்லுக்குப் பயங்கரமான என்று பொருள். 'ஸாராஸ்' என்பது பல்லிகள் எனப் பொருள்படும் சொல்.

இதன் உடலின் நீளம் 72 அடி. கழுத்தின் நீளம் 36 அடி. உலக வரலாற்றில் மிகமிக நீளமான கழுத்துள்ள பிராணி இது ஒன்றுதான்.

குளத்தினுள்ளே மிதந்துகொண்டே நீளமான தன் கழுத்தினால் குளத்தைச் சுற்றியுள்ள தோட்டத்து மரங்களில் உள்ள இலைகளை மேய்ந்து கொண்டிருக்குமாம்.

முழுவளர்ச்சி அடைந்த டைனோஸார் 43 அடி நீளம் வரை இருக்கும் என்று தெரியவந்துள்ளது.

இவற்றின் எலும்பு அமைப்பை வைத்துப் பார்க்கும்போது டைனோஸார் மிருகங்கள் பின்னங்கால்களால் நடப்பவை என்றும் தெரியவந்துள்ளது.

ஆமை,முதலைபோன்று டைனோஸரும் முட்டை இடும்.

அதன்முட்டை ரக்பி பந்து அளவில் இருக்கும். சில முட்டைகள் 12மீற்றர் நீளமும் 9 முதல் 10 தொன் வரை எடையும் கொண்டவையாக உள்ளன.

டைனோஸார் முட்டைகள் உலகின் பலபாகங்களில் காய்ந்து சருகாகி நிலத்தில் புதைந்து கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பிரெஞ்சு நாட்டில் தென்மத்திய தரைப் பகுதியிலே அதிகமான எண்ணிக்கையில் டைனோஸார் முட்டைகள் காணப்பட்டன.

அமெரிக்காவில் மண்டானா மாநிலத்திலும் இம்முட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

சில இடங்களில் ஆறு கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இட்ட டைனோஸார் முட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

அழிந்துபோன உயிரினங்கள் விசேடமாக டைனோஸாரின் இனவிருத்தி உயிரியல் சம்பந்தமான ஆராய்ச்சியில் முன்னேற்றம் காண டைனோஸார் முட்டைக் கோதுகள் உதவும் என்று நம்பப்படுகின்றது. ★

மனித இறைச்சி உண்ட மன்னர் பொக்காஸா!

மனித இறைச்சியை உண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட மன்னர் ஒருவருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை, ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டுவிட்டது.

மத்திய ஆபிரிக்க ராஜ்யத்தின் மன்னராக இருந்து 1979இல் பதவி கவிழ்க்கப்பட்டவர் ஜேன்பெடெல் பொக்காஸா.

பிரெஞ்சு நாட்டில் தஞ்சம் புகுந்த இவர் கொலை உட்பட பல குற்றச்சாட்டுக்களுக்கு இலக்கானார்.

அவரின் மனைவி நடத்திய தொழிற்சாலை ஒன்றில் யூனிபோர் முக்கான துணி வாங்கவேண்டும் என்றுமன்னராக இருந்த சமயம் பொக்காஸா மாணவருக்கு உத்தர விட்டார். மாணவர் அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதற்காக 100 மாணவர் கைது செய்யப்பட்டனர். பின்னர் சிறையில் அவர்கள் கொல்லப்பட்டனர்.

பொக்காஸாவே 17 மாணவரைத் தனது கைகளினால் அடித்துக் கொன்றார்.

இக்குற்றச்சாட்டுக்களை விசாரணைசெய்த நீதிமன்றம் பொக்காஸாவுக்கு மரணதண்டனை விதித்தது.

இப்போது மத்திய ஆபிரிக்கக் குடியரசின் ஜனாதிபதி கொலிஸ்பா. (67 வயது) பொக்காஸாவுக்குக் கருணை காட்டி ஆயுள் தண்டனை விதித்திருக்கிறார். ★

கைகளினால் மல்யுத்தம் புரிவது ஒலிம்பிக்ஸில் சேர்க்கப்படுமா?

கைகளினால் மல்யுத்தம் நடத்துவது பல நாடுகளில் பரவி வருகின்றது.

பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் 'கை மல்யுத்தப்' தேசிய, சர்வதேச சம்பியன் பட்டங்களுக்காகவும் நடத்தப்பட்டு வருகின்றது.

உலக சம்பியனாக 40 வயதான கிளீவ் மகிரே வெற்றியீட்டினார். அவரின் வயது 40.

ஏனைய விளையாட்டுக்கள் போன்றதே கை மல்யுத்தமும்; குறைந்தது என்று எண்ணிவிடக் கூடாது - இப்படி உலக மல்யுத்த ரசிகர்கள் கூறுகின்றனர்.

'கை மல்யுத்தம்' விளையாட்டை ஒலிம்பிக்ஸிலும் சேர்க்க வேண்டும். இந்த அபிப்பிராயம், உலக மலயுத்த வட்டாரங்களில் வலுப்பெற்று வருகின்றது.

இனித் தரையிலேயே உட்கார ராமாராவ் முடிவு

'இனிப் பொதுக்கூட்டங்களில் பேசச் செல்லும்போது மேடையில் நாற்காலியில் உட்கார மாட்டேன்; தரையிலேயே அமர்ந்து பேசுவேன்' என்று ஆந்திர முதலமைச்சர் ராமாராவ் கூறியுள்ளார்.

ஊருக்கு வெளியே ஆஸ்ரமத்தில் வசிப்பேன், காவி உடைதான் உடுத்துவேன், ஒரு காதில் மட்டும் வளையம் அணிந்து கொள்வேன் என விசித்திரமாக ஏதாவதொன்றை அவ்வப்போது கூறி வருபவர் ராமாராவ். இந்த வரிசையில் தற்போது நாற்காலியைத் துறக்கும் 'ஆசை' அவருக்கு வந்துள்ளது.

குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் வரும்போது மட்டும் நாற்காலியைப் பயன்படுத்துவேன் என்றார் அவர்,

மேடக் மாவட்டத்தில் மாம்போஜி பள்ளியில் பொதுக்கூட்டத்தில் பேச வந்தார். மேடையில் உள்ளநாற்காலியை விட்டுவிட்டு திடீரென்று தரையில் அமர்ந்து கொண்டார்.

பொதுக்கூட்டங்களில் மாலைகளை அணிவிப்பதையும் தாம் இனி ஏற்கப்போவதில்லை என்றும் ராமாராவ் கூறினார். ★

விமானத்தைப் போல காருக்கும் 'பிளாக் பாக்ஸ்'

விமானத்தில் பிளாக் பாக்ஸ் (கறுப்புப்பெட்டி) என்ற ஒருவகை ஒலிப்பதிவு சாதனம் வைக்கப்பட்டு இருக்கும். விமானம் விபத்துக்குள்ளானால் இந்த சாதனம் மட்டும் சேதமாகாமல் தப்பிவிடும். அதன் மூலம் விபத்து எப்படி நடந்தது என்பதைக் கண்டுபிடித்து விட முடியும். இந்த பிளாக் பாக்ஸ் இப்போது கார்களுக்கும் பொருத்தப்படுகிறது. இங்கிலாந்தில் தான் இந்த முன்னேற்றம்.

'பிளாக் பாக்ஸ்' என்பது டேப்ரிக்கார்டர் தான். மினி ரிக்கார்டர் அளவு கொண்ட இது விமானத்தில் விமானியின் அறையில் வைக்கப்பட்டு இருக்கும். குண்டு வைத்தோ, சதி செய்தோ விமானம் தகர்க்கப்படுமானால் அது எப்படி நடந்தது? சதி செய்தவர்கள் யார் என்பதை இந்தச் சாதனம் காட்டிக் கொடுத்து விடும். காரணம் விமானம் விபத்து நடந்த பின்னும் பாதுகாப்பாக இருக்கும் அளவுக்கு நவீன முறையில் இது தயாரிக்கப்பட்டு உள்ளது. கடைசி நேர உரையாடலை இது பதிவு செய்திருக்கும். அதைக் கொண்டு சதிகாரர்களை அடையாளம் காணமுடியும்.

இந்த 'பிளாக் பாக்ஸ்' இப்போது கார்களுக்கும் வந்து விட்டது. இங்கிலாந்தில் இது பிரபலமாக உள்ளது. வீடியோ கேசட் அளவில் உள்ள இந்த பிளாக் பாக்ஸ், காரின் டேஷ் போர்ட்டுக்கு கீழே வைக்கப்படுகிறது. காரின் வேகம், பயணம் செய்வோரின் பேச்சுகள் ஆகியவை இதில் பதிவாகி விடும். 6 வாரங்கள் வரை இதில் உள்ள கேசட்டில் பதிவு செய்யலாம். பின்னர் மினி கம்பியூட்டரில் பதிவு செய்து கொள்ளலாம்.

★ அண்டத்தில் இருந்து எடுக்கப்பட்ட

உலகப் படங்களுக்கு நல்ல கிராக்கி!

வானவெளியில் இருந்து எடுக்கப்பட்ட உலகப் படங்கள் வேண்டுமா?

சோவியத் யூனியனுக்கு ஆடரை அனுப்பி வைத்தால் தேவையான படங்கள் கிடைக்கும்.

இச்சேவையை சோவியத் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

சோவியத் யூனியன் வானவெளிக்கு அனுப்பி வைத்த செய்மதிகள் உலகைப் பல கோணங்களில் படம் பிடித்து அனுப்பியிருக்கின்றன.

அப்படங்களுக்கு உலகச் சந்தையிலே நல்ல கிராக்கி

அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளின் செய்மதிகளும் உலகை படம் பிடித்து அனுப்பியுள்ளன.

ஆனால் சோவியத்படங்களுக்கு மட்டும் ஏன் மவுசு?

அமெரிக்கச் செய்மதியில் இருந்து எடுத்த படத்தில் ஆறு ஒன்றில் ஓடிக் கொண்டிருக்கும் கப்பல் ஒன்றை ஒருவர் அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

பிரெஞ்சுச்செய்மதியில் இருந்து எடுத்த படத்தில் அக்கப்பலின் மேல் தளம் துல்லியமாகத் தெரியக்கூடியதாக இருக்கும்.

ஆனால் சோவியத் படத்தில் மேல்தளத்தின் இருமருங்கிலும் பிணைக்கப்பட்டுள்ள உயிர் காக்கும்படகுகளையும் காணக் கூடியதாக இருக்கிறது!

இதன் காரணமாகத் தான் வானவெளியில் இருந்து எடுக்கும் படங்களை இராணுவ உளவு வேலைகளுக்கும் பயன்படுத்தலாம் என்று அமெரிக்கப் பத்திரிக்கைகள் கூறுகின்றன.

சோவியத் செய்மதி வானவெளியில் இருந்து எடுத்த படம் ஒன்றில் டமாஸ்கஸ் நகரில் உள்ள தனது வீட்டை துல்லியமாக அடையாளம் காணக்கூடியதாக இருந்தது என்று சிரியப்பிரசை ஒருவர் தெரிவித்துள்ளார்.

உதாரணமாக, வானவெளியில் இருந்துஎடுத்த இலங்கைப்படம் வேண்டுமானால் சோவியத் யூனியனுக்கு ஆடர் கொடுக்க வேண்டியதுதான்!

ஆனால் விலை?ஒரு படத்துக்கு ஒரு லட்சம் டாலர் முதல் 10 லட்சம் டாலர் வரைகட்டணம்செலுத்த வேண்டும்.

செய்மதியில் இருந்து எடுத்த உலகப்படமும் அமோகமாக விற்கின்றது.

செய்மதிப் படங்களை விற்கும் பணியை சோவியத் அரசின் 'நில உலகின் மேற்பரப்புக் கணக்கியல், நிலப்படம் வரைதல் மத்திய நிலையம்' மேற்கொண்டுள்ளது. ★

திருடனைக் காட்டிக் கொடுத்த பழைய செருப்பு

தொடர்ந்து பல இடங்களில் கைவரிசையைக் காட்டி வந்த ஒரு திருடனை அவனது செருப்பே காட்டிக் கொடுத்தது. எகிப்து நாட்டில் இந்தச் சம்பவம் சமீபத்தில் நடந்தது.

கடந்த வாரம் அலெக்சாண்ட்ரியா நகரில் ஒரு புத்தகக் கடையில் 20 ஆயிரம் ரூபாய் திருட்டுப் போனது. இதுபற்றி கடைக்காரர் உடனடியாகப் பொலீஸில் புகார் செய்தார். கடை முழுவதும் பொலீஸார் சோதனை செய்தனர்.

கடையில் கல்லாப் பெட்டியில் இருந்து 20 ஆயிரம் ரூபாய் களவு போயிருந்தது. கல்லாப் பெட்டியில் ஒரு சோடி கிழிந்த செருப்பு மட்டுமே கிடந்தது. திருடன் தான் இந்தச் செருப்பை விட்டுச் சென்றிருக்கக் கூடும் என்று பொலீஸார் எண்ணினர்.

விசாரணை தொடர்ந்தது. கடை உரிமையாளர் ஒரு புதுக்கதையைச் சொன்னார். ''சில மாதத்துக்கு முன்பு ஒரு இளைஞன் என் கடைக்கு வந்தான். அவன் இதே போன்ற செருப்பை அணிந்து இருந்தான். இதே செருப்பாகக்கூட இருக்கலாம் சரியாக நினைவில்லை. செருப்பைத் தைத்துக்கொள்ள காசு தரமுடியுமா என்று என்னிடம் டீசன்டாகப் பிச்சை கேட்டான்'' என்று கடைக்காரர் சொன்னார்.

பொலீஸ் அதிகாரியின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்தது. இளைஞன் அடையாளத்தை கடைக்காரர் மூலம் தெரிந்துகொண்டு தீவிர விசாரணையில் பொலீஸார் இறங்கினர். ஒருவழியாக அவன் பிடிபட்டான். கடையில் கைவைத்ததை ஒப்புக் கொண்டான்.

அவன் என்ன சொன்னான் தெரியுமா? ''செருப்புத் தைக்கக் காசு கேட்டேன். தரமாட்டேன் என்று கடைக்காரர் சொன்னார். அதனால் தான் திருடிவிட்டு, கிழிந்த செருப்பை கல்லாப் பெட்டியில் வைத்தேன். வெளியே எங்காவது தப்பிச் செல்ல முயன்றபோது பிடிபட்டேன் என்றான்.

புதுவிதமான சைக்கிள்!

பயணஞ்செய்துகொண்டே சதுரங்கம் விளையாடலாம்

புதுவிதமான சைக்கிள் ஒன்றையே கீழே படத்தில் காண்கிறீர்கள்

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசில் இந்தச் சைக்கிள் தயாரிக்கப்பட்டுள்ளது.

தயாரித்தவர் டீற்றர் செனப்ற் என்பவர்.

இந்த சைக்கிளில் மூன்று பேர் பயணஞ் செய்யலாம்.

எத்தனை கிலோமீற்றர் தூரமும் பயணம் செய்யலால்.

ஒருவர் மிதிக்க இருவர் 'செஸ்' (சதுரங்கம்) விளையாட்டிலும் ஈடுபட்டுக்கொண்டு பயணம் செய்யும் இச்சைக்கிள் எப்போது நம் ஊருக்கு வருமோ? அதற்கிடையில் நம்மவர்கள் டிசைனைப்பார்த்துத்தயாரித்து விடமாட்டார்களா? என்ன! ★

பாலைவனத்தில் செல்லும் கார்!

மலைப்பகுதி, பாலைவனம், குளிர் பிரதேசம் ஆகியவற்றில் செல்லக் கூடிய புதியகார் ஒன்றை ரஷிய நிபுணர்கள் உருவாக்கி உள்ளனர்.

ஜீஸ் - 11023 என்று அழைக்கப்படும் இந்தக் கார் 4 சிலிண்டர் கொண்டது. 50 குதிரை சக்தி உடையது. வசதியான இருக்கைகள் அமையப்பெற்றது.

ஒருலிட்டர் பெட்ரோ 20 கிலோ மீட்டர் தூரம் செல்லும். ★

பஞ்சாமிர்தம்
பலரச அமிர்தம்

'சூரிய' பட்டரியில் ஓடும் கார்களின் ஓட்டப்பந்தயம்!

சூரிய ஒளியில் வேலை செய்யும் பட்டரியினால் ஓடும் கார்களின் ஓட்டப் போட்டி ஒன்று ஆஸ்திரேலியாவில் அண்மையில் நடைபெற்றது.

இதில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட 'சன் ரைஸர்' என்ற கார் முதலாவதாக வந்தது.

டார்வின் என்னும் இடத்தில் இருந்து அடிலயிட் வரை இந்த ஓட்டப்பந்தயம் நடந்தது.

3 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்தைப் பல கார்கள் கடக்காது இடையே நின்று விட்டன.

தினமும் ஒன்பது மணித்தியாலயங்கள் மட்டுமே பந்தயத்தில் கலந்து கொண்ட கார்கள் ஓட அனுமதிக்கப்பட்டன.

இராணுவத்தினர் குடைபிடிக்கத்தடை!

இத்தாலி நாட்டில், இராணுவத்தினர் குடை பிடிக்க அரசு தடை விதித்து உள்ளது.

'இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள சீருடை சராசரி மழையில் இருந்து அவர்களைப் பாதுகாக்கப் போதுமானது. எனவே குடை தேவை இல்லை' என்று ராணுவ அமைச்சகம் விளக்கம் அளித்து இருக்கிறது. ★

வாழை இலையில் சாப்பிடுவதன் மகத்துவம்

விரதம் இருக்கும் காலங்களில் தான் நம்மவர்கள் வாழை இலையில் சாப்பிடுவார்கள்.

திருமணம், மற்றும் விருந்துபசாரங்களில் வாழை இலைகளில் சாப்பாடு பரிமாறப்படுகின்றது.

ஏன் வாழை இலையில் சாப்பாடு பரிமாறப்பட வேண்டும்?

அதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன.

வாழை இலை சாப்பாடு உஷ்ணத்தைக் குறைக்கிறது; பித்தம்வராமல் தடுக்கிறது.

மிக முக்கியமாக காம உணர்வைச் சரியான கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வருகின்றது. வாழை இலையே நீவாழ்க!

இந்தியர் விருதுபெற உதவிய பாகிஸ்தானியர்

இந்திய விமானப் படை அதிகாரிக்கு 'மகா வீர் சக்ர' பதக்கம் கிடைக்க பாகிஸ்தான் விமானப்படை திகாரி உதவினார்!

இப்புதுமை எப்படி நடந்தது?

இரண்டாவது இந்தியா - பாகிஸ்தான் யுத்தம் 1965 இல் நடந்தது.

7-9-1965 இந்தியயுத்த விமானம் ராவல் பிண்டியைத் தாக்கச் சென்றது. அந்த விமானத்தை ஓட்டிச் சென்ற பைலட் ஸ்குவாட்ரன் லீடர் அலமந்தா தேவ்யா என்பவர்.

அன்று போன அந்த விமானம் பின்னர் திரும்பவே இல்லை. அதிகாரி தேவ்யாவும் காணமற் போய் விட்டார்.

அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் இருந்தது.

23 ஆண்டுகளாக நீடித்த மர்மம் இந்த ஆண்டு தான் துலங்கியது.

பாகிஸ்தான் விமானப் படை அதிகாரியாக 1965 இல் பணிபுரிந்த லெப்டினன்ட் அம்ஜாத் ஹுசேன் எழுதிய சம்பவம் ஒன்று புத்தகம் ஒன்றில் வெளியானது.

அப்புத்தகத்தின் பெயர் 'பாகிஸ்தானுக்காக நடந்த யுத்தம்- என்பது.

லெப்டினன்ட் 7-9-1965 இல் தான் ஓட்டிச்சென்ற ஜெட் சண்டை விமானம் எப்படிச் சுட்டு வீழ்த்தப் பட்டது என்பதை லெப்டினன்ட் ஹுசேன் அதில் விவரித்து இருந்தார்.

இந்திய விமானம் ஒன்றை எப்படித்தான் சுட்டுவீழ்த்தினார் என்பதையும் அவர் விவரித்து இருந்தார். சேதமடைந்த இந்திய விமானம் பின்னர் காணமற் போய்விட்டது என்றும் அவர் கூறியிருந்தார்.

இந்திய இராணுவ அதிகாரிகள் இத்தகவலை ஆராய்ந்து பார்த்ததில் தேவ்யா சென்ற விமானம்தான் அன்று காணமற்போனது என்ற மர்மம் துலங்கியது.

வீரச்செயல்புரிந்த 23 ஆண்டுகளின் பின்னர் தேவ்யா கௌரவிக்கப்பட்டுள்ளார். இரண்டாவது அதியுயர் இராணுவ உயர்விருது 'மகா வீர் சக்ர' அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவரின் சார்பில் பெங்களூரில் வாழும் அவரின் மனைவி சுந்தரி சென்று ஜனாதிபதி வெங்கடராமனிடம் இருந்து விருதைப் பெற்றார்.

வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த கணிதமேதை

கணித மேதை இராமானுஜன் நூற்றாண்டு - 6

உடல் நலம் பெற்றதும் ராமானுஜன் மீண்டும் சென்னை வந்து வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டார். அது கிடைக்காமையால் அவர் தனிப்பட்ட முறையில் கணித பாடம் சொல்லிக் கொடுத்தார். பேராசிரியர் சேசு ஐயர் இதுபற்றிக் கேள்விப்பட்டு மிகுந்த மனவருத்தமுற்ருர். அவர் ராமானுஜனை ஆந்திரப்பிரதேசத்திலுள்ள நெல்லூர் கலெக்டர் (Collector) திவான் பகதூர் ஆர். ராமச்சந்திராவைச் சென்று காணும்படி கூறியனுப்பினுர். திரு. ராவ் அரசாங்கத்தில் உயர் பதவி வகித்ததுடன் இந்திய கணிதக்கழகத்தின் செயலாளராகவும் இருந்தார். ராமானுஜன் அவரிடம் தமது குறிப்புப் புத்தகங்களைக் காட்டினுர். ராமானுஜன் கணிதத்தில் அசாதாரணமான ஆற்றல் மிக்கவர் என்பதைப் புரிந்து கொண்ட திரு. ராவ் எவ்வகையான உதவி வேண்டுமென அவரிடம் வினவினுர் தமது கணித ஆராய்ச்சிகளைத் தடங்கலின்றித்தொடர ஒரு தொழில் வேண்டுமென ராமானுஜன் கூறினுர். நெல்லூர் போன்ற பின்தங்கிய இடத்தில் அவரை வைத்திருக்க திரு. ராவ் விரும்பவில்லை. எனவே அவருக்கு ஓர் உபகாரச் சம்பளம் பெற்றுத் தருவதாகவும் அல்லது வேறு வகையில் உதவுவதாகக் கூறி அவரைச் சென்னைக்குத் திருப்பியனுப்பினுர். தாம் கூறியபடி செய்ய முடியாமையினுல், கணித ஆர்வம் மிகுந்த திரு ராவ் தமது சொந்தப்பணத்திலிருந்து மாதம் 25 ரூபா வீதம் ஓராண்டுகாலம் வரை உதவி வந்தார்.

ராமானுஜன் போன்ற மான உணர்வு மிக்க ஒருவருக்கு வேறொருவரின் தருமப்பணத்தில் தங்கியிருக்க விருப்பமில்லை. அதனுல் சேசு ஐயர், ராமசுவாமி ஐயர் ஆகியோரின் தூண்டுதலினுல் இந்திய கணிதக் கழகத்தின் பொருளாளராகவிருந்த திரு. நாராயண ஐயர் ராமானுஜனுக்கு உதவினுர். நாராயண ஐயர் சென்னைத் துறைமுக சபையில் முகாமையாளராக இருந்தார். அவருடைய உதவியினுல் சென்னைத் துறைமுகத்தில் 1912 மார்ச் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் எழுதுவினைஞர் பதவி கிடைத்தது. மாதச் சம்பளம் 25 ரூபா மட்டுமே. எனினும் அது தம் சொந்த உழைப்பில் வாழக்கூடிய வாய்ப்பை அளித்தலால் ராமானுஜன் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தார்.

சென்னையில் ராமானுஜனுடன் அவரின் மனைவி ஜானகி, தாயார், பாட்டி ஆகியோரும் தங்கியிருந்தனர். இதனுல் அவரின் சம்பளம் போதவில்லை. சில கல்லூரி மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் பாடம் சொல்லிக் கொடுத்தார் எனினும் பணவசதி போதாமையால் தமது கணித ஆராய்ச்சிகளை எழுத துறைமுகத்திற்கு எதி கள் சுற்றிவரும் தாள்கள், பிரகடனங்களைச் சேகரிப்பார். துறைமுகத்தினருகே அவர் இங்ஙனம் தாள்களைப் பொறுக்குவதைத் தாம் கண்டதாக அவரின் நண்பரொருவர் கூறியுள்ளார். ஏற்கனவே நீலமையில் எழுதப்பட்ட தாள்களைப் பொறுக்கி அவற்றில் சிவப்புமையினுல் எழுதிப் பயன்படுத்தும் நிலையில் அவரின் ஏழ்மைநிலை இருந்தது.



இராமானுஜன்

இக்காலப் பகுதியில் இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் சில இந்திய கணிதக் கழகச் சஞ்சிகையில் வெளியாகின. தமக்குக்கிடைத்த ஓய்வு நேரத்தின் போதெல்லாம் முழுமூச்சாகக் கணித ஆராய்ச்சியில் ஈடுபட்டார். சாப்பிடவும் மறந்து ஆராய்ச்சியில் ஈடுபடும் இவருக்கு சாப்பாட்டை இவரின் தாயார் அல்லது மனைவி வற்புறுத்தி ஊட்டிவிடுவதுண்டு. வறுமையும் பிறசிரமங்களும் இருந்த போதும் அவர் ஆர்வத்துடன் கணித ஆராய்ச்சிகளில் மூழ்கிவிடுவார். பிரச்சினைகள் மிகுந்த போதும் நிதானத்துடன் கோபப்படாமல் அவர் வாழ்ந்தார்.

(வளரும்)

- சு. மகாலிங்கம் -

முகத்தில் வியர்வை அரும்பவிடாதீர்கள்

உங்கள் முகமும் உடலும் எப்போதும் அழகாக இருக்கவேண்டும் என்றே நீங்கள் விரும்புவீர்கள். விரும்பினுல் மட்டும் போதுமா? என்னஎன்ன முறைகளைக் கையாண்டால் அழகாக இருக்கலாம் என்பதை சிறிது தெரிந்துகொள்வோம்.

இப்போது வியர்வைக் காலம் ஆரம்பமாகிவிட்டது. உடல் முகமெங்கும் முத்து முத்தாக வியர்க்கும்.

இவற்றை அப்படியே விடக்கூடாது. அப்படி விட்டால் அவை காய்ந்து வியர்வை வெளியேறும் துவாரங்களை அடைத்து மணல்மாதிரி சிறுசிறு பருக்கள் ஏற்படும் இது முக, உடல் அழகைக் கெடுத்துவிடும்.

இந்தப்பருக்கள் வராமல் தடுப்பதற்கு, வியர்வை வந்து முகத்தோலின்மேல் நிற்க விடக்கூடாது. கழுவிவிடவேண்டும். ஆனல் அடிக்கடி கழுவிக்கொண்டும் இருக்கமுடியாது.

எனவேஒரு சுத்தமான துணியால் முகத்தில் அரும்பும் வியர்வையைத் துடைத்துவிடவேண்டும

அப்படிச் சுத்தம் செய்து பின்னர் ஏதாவது ஒரு கிறீமைத் தடவி விட்டால் அவை நாளடைவில் கொட்டிவிடும்.

வியர்வை காரணமாக காலை மாலை என்று அடிக்கடி முகத்தையும் உடலையும் சோப்போட்டு சுத்தம் செய்யவேண்டி இருக்கிறது.

இப்படி ஒருநாளுக்கு அடிக்கடி சோப்போட்டு சுத்தம்செய்தால் விரைவில் நம் தோல் பழுதடைந்துவிடும் வாய்ப்பு இருக்கிறது.

அதுமட்டுமல்ல தோல்களில் சுருக்கம்விழுந்து உங்கள் வயதில் ஐந்தைக் கூடுதலாகக் காட்டும்.

இதற்குப் பதிலாக பச்சைப் பயத்தம் மாவுடன், பச்சைமஞ்சள் தூளையும் கலந்து ஒரு போத்தலில் போட்டு வைத்துக்கொள்ளுங்கள்.

இந்த பயத்தம்மா, மஞ்சள் கலந்த தூளில் கொஞ்சம் எடுத்து உபயோகிக்கலாம்.

மஞ்சள் ஒரு கிருமி நாசினி, பச்சைப்பயறு உடலுக்குக் குளிர்ச்சியானது. எனவே இந்தக் கலவைத்தூள் உடலை அழகாக வைத்திருப்பதுடன் நோய்வராமல் பாதுகாப்பையும் அளிக்கும்.

-அல்லி

குலோப் ஜாமுன்

தேவையான பொருட்கள்:

ரின்பால் - ஒன்று (1)
கோதுமை மா - ஒரு இருத்தல்
மாஜரீன்-ஒரு பக்கெட் ஒன்று (113 கி)
பேக்கிங் பவுடர் - ஒன்றரைத் தேக்கரண்டி.

சீனிப்பாகு தயாரிக்கத் தேவையானவை:

சீனி - 1 இருத்தல்
தண்ணீர் - (1½) ஒன்றரைப் போத்தல்
ஏலக்காய் - பத்து.

செய்முறை:

கோதுமை மாவையும் பேக்கிங் பவுடரையும் ஒன்ருகக் கலந்து இருமுறை நன்ருக அரித்துக் கொண்டு பின்னர் அதற்குள் மாஜரீனைப்போட்டு கைவிரல்களால் நன்ருகப் பிசையவேண்டும். பின் ரின்பாலைக் கொஞ்சம் கொஞ்சமாக அக்கலவைக்குள் ஊற்றி நன்ருகக் கைவிரல்களில் ஒட்டாத பதம் வரும்வரை பிசையவேண்டும். இனி 'மாபிளை' விடச் சிறிது பெரிய உருண்டைகளாக உருட்டி சுத்தமான தேங்காய் எண்ணெயில் பொன்னிறமாக வரும் வரை பொரித்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

சீனிப்பாகை மேலே கொடுக்கப்பட்டுள்ள அளவின்படி பாகு சிறிது தடிப்பாக வரும்வரை காய்ச்சவேணும். ஏலக்காய்களை அம்மியில் வைத்து சிறிது குத்திவிட்டுக் கொதித்துவரும் பாகினுள் போடவேண்டும். (பாகு நூல் பதத்திற்கு வரவே கூடாது அதற்கு முதல் இறக்கவேண்டும்)

இவ்வாறு தயாரித்த சீனிப்பாகினுள் பொரித்த உருண்டைகளைச் சுடச்சுட உடனடியாகப் போட்டு ஒன்று அல்லது இரண்டு மணித்தியாலங்கள் ஊறவையுங்கள். பின்னர் சிறு பாத்திரத்தினுள் உருண்டைகளுடன் சிறிது பாகையும் ஊற்றிப் பரிமாறுங்கள். உங்கள் குட்டிப்பிள்ளைகள் உண்ணும் அழகைப் பாருங்கள்.

திருமதி.சி பிரபாகரன்

பெண்களே உங்களுக்கு!

உலகின் தலைவிதியே உங்கள் கையில் தான் இருக்கிறது. குழந்தையின் ஒழுக்கத்தை உருவாக்குவது நீங்கள்தான். எதிர்கால காந்திஜீ, நெப்போலியன், ஷேக்ஸ்பியர்களை நீங்கள் உருவாக்கலாம். எல்லாம் உங்கள் கையில் தான் இருக்கிறது.

குழந்தை ஒன்றினிடத்து ஏற்படும் பதிவுகள் நிரந்தரமானவை, மாற்ற முடியாதவை. இளம் பருவத்தில் ஒருவனது குணங்களை உருவாக்கி ஒருவனது கடைசி நிமிடம்வரை இந்தப் பதிவுகள் அவனைத் தொடர்கின்றன. எனவே ஒரு தாய்க்குள்ள பொறுப்பு மிகப்பெரிது. தொட்டிற் பருவத்துப் பதிவுகள், பழக்கங்கள் சிறிய ஆன்மீகப் பதிவுகளாக அமைகின்றனவா என்பது குறித்து அவள் கருத்துச் செலுத்தவேண்டும். உண்மையான ஆத்மீகப் பண்பாட்டினைச் செழிப்பான இளம் உள்ளங்களில் தாயானவள் பதிப்பிக்கவேண்டும்.

தாய்மார்கள் வாழ்க்கையில் உண்மைத்தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தெய்வநெறியில் நிற்க வேண்டும். அப்பொழுது தான் தங்கள் குழந்தைகளையும் அவர்கள் நன்னெறியில் செலுத்தமுடியும். அப்பொழுதுதான் தங்கள் கணவன்மார்களுக்கு உதவியாக இருந்து அவர்களையும் அவர்கள் நல்வழிப்படுத்த முடியும்.

ஸ்ரீ சுவாமி
சிவானந்தர்

சொர்க்கத்துக்குப் போன மாமியார்

மயிலம்பட்டி என்பது ஒரு சிறு கிராமம், அங்கு செல்லாயி என்றொரு கிழவி இருந்தாள். அவளுக்கு பொன்னப்பன் என்ற மகன் உண்டு. பொன்னப்பன் மனைவி பெயர் கன்னியம்மா. மூவரும் ஒரே வீட்டில் வாழ்ந்து வந்தார்கள்.

தினமும் மாமியாருக்கும் மருமகளுக்கும் சண்டை வந்து கொண்டே இருக்கும். இதை பொன்னப்பன் அறிந்தாலும் கண்டு கொள்ளவே மாட்டான். பொன்னப்பனும், அவன் அம்மாவும் சுண்டைக்காய் பறித்துவரத் தினமும் தோட்டத்திற்குச் செல்வார்கள். பறித்து வரும் சுண்டைக்காயை விற்றுக் காசு சேர்ப்பார்கள்

அவர்கள் இருவரும் சுண்டைக்காய் பறித்து வரச் சென்றதும் வீட்டிலுள்ள தானியங்களைச் சிறிது சிறிதாக எடுத்து அக்கம் பக்கத்தாரிடம் விற்று விடுவாள் கன்னியம்மா. அதில் கிடைக்கும் காசை ஒரு அடுக்குப் பானையில் சேர்த்து வைப்பாள்.

ஒருநாள், அடுக்குப் பானையை எதற்காகவோ எடுத்தாள் மாமியார். அப்போது, மருமகள் சேமித்த காசு உள்ளே இருப்பதைப் பார்த்து விட்டாள். உடனே, மருமகளைக் கண்காணிக்கத் தொடங்கினுள். மருமகள் செய்யும் திருட்டுத்தனத்தைக் கண்டு பிடித்து விட்டாள். மகனிடம் சொல்லிக் கொடுத்தாள். 'திருட்டுப் பெண்ணை வீட்டில் வைத்து இருக்கலாமா?' குடும்பத்திற்கே அதனுல் கேடு வரும்; என்று கூறினுள். 'உடனே இவளை எரித்துக் கொன்றுவிடு' என்று உபதேசம் செய்தாள்.

அம்மா சொல்வதை மீறுவதற்கு பொன்னப்பனுக்குப் பயம். மேலும் திருட்டுத்தனம் செய்த பெண்டாட்டிக்குத் தண்டனை தந்தே தீர வேண்டும் என்று அவனும் நினைத்தான். எனவே தன் மனைவியை இழுத்துப்போட்டு அடித்தான். அவன் மயக்கம் அடைந்ததும் ஒரு சாக்குப் பையில் போட்டுக் கட்டினுன். சுடுகாட்டிற்குத் தூக்கிப்போய் மூட்டையைக் கீழே இறக்கினுன். சுற்றிலும் கிடந்த சுள்ளிகளையும், குச்சிகளையும் பொறுக்கினுன். அப்போதுதான் கன்னியம்மாவை எரிக்கத் தீப்பெட்டி எடுத்துவரவில்லையே என்ற நினைவு வந்தது. உடனே தன் மனைவியை மூட்டைக்குள் வைத்து விட்டு தான் மட்டும் வீட்டிற்கு ஓடினுன்.

அதற்குள் மூட்டைக்குள் மயங்கிக் கிடந்த கன்னியம்மாவிற்கு மயக்கம் தெளிந்தது. மெல்ல முனங்கினுள் அந்தச் சமயம் ஒரு ஆடு மேய்க்கும் இடையன் ஆடுகளை மேய்த்தபடி அங்கு வந்தான். மூட்டைக்குள் இருந்து முனகல் சத்தம் வருவதைக் கேட்டான். உடனே 'பரபர'வென்று மூட்டையை அவிழ்த்துப் பார்த்தான். உள்ளே இருந்த கன்னியம்மாள் அழுதபடி எழுந்து வெளியே வந்தாள். ஆட்டுக்காரனிடம் நடந்ததைக் கூறினுள். உடனே அவன் கன்னியம்மாவிடம், 'சரி! கவலைப் படாதே இங்கிருந்து நீ தப்பி ஓடி விடு' என்று கூறி அவளை ஓடச் சொன்னுன்.

தன் ஆட்டுமந்தையில் இருந்த ஒரு கிழட்டு ஆட்டை கழுத்தை முறித்துக் கொன்ருன். மூட்டையில் வைத்துக் கட்டினுன். பொன்னப்பன் வைத்தது போலவே மூட்டையை வைத்து விட்டு அங்கிருந்து சென்ருன்.

பொன்னப்பன் தீப்பெட்டியுடன் திரும்பி வந்தான். கன்னியம்மாள் இருப்பதாக நினைத்துக் கிழட்டு ஆட்டை மூட்டையோடு தீயில் தூக்கிப் போட்டு எரித்தான்.

தன் கணவன் ஆட்டை எரித்துவிட்டுத் தன்னை எரித்ததாக நினைத்தபடி செல்வதைக் கன்னியம்மா பார்த்தாள். பின் எங்கே செல்வது என்று தெரியாமல் திணறினுள். சுடுகாட்டுக்கு கொஞ்ச மண்வெளியே ஒரு காளி கோவில் இருந்தது. இன்று இரவு மட்டும் அங்கு தங்கலாம். மறுநாள் காலையில் மேற்கொண்டு என்ன செய்வது என்று யோசிக்கலாம் என்று முடிவு செய்தாள்.

(வளரும்)

[illegible] இளமை

எங்கே விரைந்து ஓடுகிருய்?

வட்ட நிலா எழுகிறது
வானில் உலா வருகிறது
பட்டுத் துகிலாம் முகிலுள்ளே
பதுங்கிப் பதுங்கி விரைகிறது.

வெள்ளி நிலவே நீ பாருக்(கு)
அள்ளித் தெளிக்கும் ஒளியினிலே
உள்ளம் மகிழ்ந்து சிறுவர்நாம்
துள்ளி விளையாடிடுவோம்.

அம்மா மடியில் உட்கார்ந்து
அடம்பிடிக்கும் தம்பிப் பயல்
உன்னை வேணும் என்கின்ருன்
என்னே? இறங்கி வாராயோ?

அந்தோ கடலும் உன்வரவால்
ஆனந்தத்தில் பொங்குவதேன்?
இந்த அல்லி மலர் கூட
இதழை விரித்தேன் சிரிக்கிறது?

சின்னஞ் சிறிய பிறையே நீ
தினமும் வளரும் விந்தையென்னே?
உண்ணும் உணவு எதுவாமோ?
உரைப்பாய் உன்போல் நாம்வளர;

சிறுவர் நாமும் உன்வரவால்
சிரித்துக் களித்துக் குதித்தாட
எதுவும் பாராமுகத்தே னுய்
எங்கே விரைந்து ஓடுகிருய்?

- நெடுந்தீவு லக்ஸ்மன் -

◆

நடனக்கலையில் ஆண்களால் ஏன் சோபிக்க முடியாது?



ஆடற்கலை காணீரோ! இப்பணிக்குப் பேரன் முதல் பேத்திவரை அர்ப்பணித்த குடும்பத்தைச் சேர்ந்தவர் திருமதி சாந்தினி சிவநேசன்.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடன ஆசிரியையாகப் பணி புரிந்து வருகின்ருர்.

சென்னை அடையாறு லக்ஷ்மனிடம் பரதநாட்டியத்தையும், கேரள விஸ்வகலாகேத்திரம குருஜி கோபிநாத்திடம் கதகளியையும் இவர் கற்றுக் கொண்டார்.

இவர் 'சஞ்சீவி' வாசகர்களுக்கு அளித்த பேட்டி இங்கு பிரசுரமாகின்றது.

திருமதி சிவநேசன்

ஆடற்கலை எமது பரம்பரைக்கலை. பேரனுர் திரு. ஏரம்பு முதல் எமது குடும்பம் இக்கலையை வளர்த்து வருகிறது.

தந்தை திரு. சுப்பையா இணுவிலின் பிரபலமான அண்ணாவியார். அவர் இந்தியாவிலும் நடனம் கற்றுக் கொண்டார். திரைப் படங்களிலும் பங்கேற்றுள்ளார்.

கலைக்கென அவர் ஆரம்பித்து நடத்திவந்த கொக்குவில் கலாபவனத்தை வளர்க்கும் பணியில் நான் தற்சமயம் ஈடுபட்டிருக்கின்றேன்.

ஐந்தாவது வயதில் மகாஜனக் கல்லூரி [illegible] நிகழ்ச்சியில் மேடையேறினேன். [illegible] மனோநிலை காரணமாக இப்போது நடனமாடுவது இல்லை. குரல்வளம், தாளக்கட்டு. கேள்வி ஞானம் இருப்பின் சங்கீதத்தை இலகுவில் பயிலமுடியும்.

நடனத்துக்கோ அசைவுகளைக் காட்டக்கூடிய உடலமைப்பு, உடற்கட்டு, அழகு, திறமையான முகபாவ வெளிப்பாடு, தானும் ரசித்து பிறரையும் ரசிக்க வைக்கும் திறமை இசை-தாள ஞானம் எல்லாம் ஒன்று சேர வேண்டும்.

உடை, ஆபரணங்களுக்கு நிறையச் செலவாகும். சிலருக்கு ஒரு கால வயதின் பின் நடனமாட முடியாது உடல் நிலை இடம் தராது. சூழ்நிலை, சமூகம் கூட சிலருக்குத் தடையாகிவிடும்.

நடனக்கலையால் வருமானம் பெறமுடியாது என்று கூறுவது தவறு.

ஆடற்கலையில் பெண்களைப்போல் ஆண்களினுல் ஏன் சோபிக்க முடியாது?

நடனக்கலையின் தந்தையே நடராஜப்பெருமான்தானே!

திறமையைப் பொறுத்து பெண்களிலும் பார்க்க ஆண்களின் நடனம் சில சமயங்களில் சிறப்பாக அமைந்து விடுகின்றதே!

போட்டியின் மத்தியில் இலங்கையில் நடனக்கலை விளையாடுகின்றது. சான்றிதழ் பெற்றவுடன், அரங்கேற்றத்தை முடித்தவுடன் பலர் இக்கலையைக் கைவிட்டு விடுகின்ருர்கள். இதனுல் ஆமைவேகத்தில் இக்கலை வளரவேண்டியுள்ளது.

நடனக்கலையைப் பொழுதுபோக்காகக் கொள்ளாமல் ஆத்மீக ரஸனையோடு மக்கள் ரசிகக வேண்டும்.

தற்கால பண்பற்ற நடனமுறைகளைக் கைவிட்டு சாஸ்திரரீதியான ஆடற்கலையை ஆதரிக்க வேண்டும்.

இப்படித் திருமதி சாந்தினி சிவநேசன் தனது பேட்டியில் தெரிவித்தார்.

கலையின் தந்தையே நடராஜப் பெருமான் தானே! என்கிருர் நடன ஆசிரியை.

செவ்வி: வி. பி. சர்மா

அ. தி. மு. க.வின் 'சின்னவீடு' இந்திராகாங்கிரஸ்!

சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந.வித்தியாதரன்

'நொண்டிக் குதிரை மீதேறி உடைந்த கத்தியுடன் தேர்தல் களம் செல்லும் கோமாளி ராஜாதான் மூப்பனார்' என்று ரகுமான்கான் கடுமையாக விமர்சித்தார்.

சென்னை பம்மல் இரட்டைப் பிள்ளையார் கோவில் தெருவில் நடத்தப்பட்ட தி. மு. க. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு ரகுமான்கான் பேசியதாவது:-

நடமாடுகிறார் மூப்பனார்

எனக்குத் தமிழக முதல்வர் ஆகும் ஆசை இல்லை. தமிழகத்தில் உள்ள எதிர்க்கட்சி தலைவர்கள் இதே மாதிரி அறிவிக்கத் தயாரா? என்று இ. காங்கிரஸ் தலைவர் மூப்பனார் பொதுக்கூட்டம் ஒன்றில் வீர முழக்கமிட்டு இருக்கிறார். மூப்பனாரின் சவால்கள் வெறும் ஈரம் படித்த தீக்குச்சிகள்; தோட்டா இல்லாத துப்பாக்கிகள் என்பதனை தமிழக மக்கள் நன்கு உணர்வார்கள்.

முற்றும் துறந்த முனிவரைப் போல, ஆசைகளை அறவே துறந்த ராஜரிஷிபோல முதல்வர் பதவி மேல் தனக்குப் பற்றில்லை என மூப்பனார் முழங்குகிறார். பால் அருந்த மனமில்லை என பூனை தீர்மானம் போடுவது போல இருக்கிறது மூப்பனாரின் இந்தப் பேச்சு.

தி.மு.க. ரகுமான்கான் கண்டனம்

கோமாளி ராஜா

காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரப்போவதில்லை சாலையோரத்தில் வீசி எறியப்பட்ட சருகுகள் மீண்டும் பாரிஜாத மலர்களாக மணம் பரப்பப் போவதில்லை. ஒடிந்து போன கத்திகளையும், நொண்டிக்குதிரைகளையும் வைத்துக் கொண்டு போருக்குப் புறப்படும் கோமாளி மகராஜாவாகத் தேர்தலைச் சந்திக்க மூப்பனார் புறப்பட்டு இருக்கிறார்.

கடந்த காலத்தில் எம். ஜி ஆரின் சினிமா கவர்ச்சியையும், இப்பொழுது மாஜி நடிகை ஜெயலலிதாவின் அழகு கவர்ச்சியையும், மூலதனம் ஆக்கிக்கொண்டு ஓட்டுக்களை வேட்டையாடத் திட்டம் தீட்டி இருக்கும் மூப்பனாரும், அவருடைய கும்பலும் சினிமா கவர்ச்சி அரசியலுக்கு மக்கள் மயங்கி ஓட்டு அளிக்கக் கூடாது என்று சொல்வது வேடிக்கையானவையே.

உத்தரப் பிரதேசத்தில் நடைபெறும் இடைத் தேர்தலில் நடிகர் அமிதாப்பச்சனின் சினிமா கவர்ச்சியை நம்பி இருக்கும் காங்கிரஸ், தேசியத் தலைவி தீபா, அம்பிகா ராதா, வைஜயந்திமாலா போன்றவர்களைத் தேர்தல் களத்திற்குத் தயார் செய்யும் மூப்பனாரா சினிமா கவர்ச்சி பற்றிப் பேசுவது?

தமயந்தியைக் கைவிட்ட நளனைப்போல நடிகர் திலகம் சிவாஜி, காங்கிரசைக் கைகழுவி விட்ட சோகநிலையில் மூப்பனார் ஞான உபதேசம் செய்ய ஆரம்பித்து இருக்கிறார்.

எம் ஜி. ஆரின் லஞ்ச லாவண்ய ஆட்சிக்கு நேற்றுவரை ஜால்ரா போட்டு அ.தி.மு.க.வின் சின்னவீடாக இருந்த இ. காங்கிரஸ் திடீரென்று தேர்தலை ஒட்டி தூய்மையான ஆட்சி பற்றிப் பேசுகிறது.

இவ்வாறு ரகுமான்கான் பேசினார். ★

சிவாஜி கணேசன் கட்சியில் சேர்ந்த நடிகர்கள்

நடிகர் சிவாஜி கணேசனின் தமிழக முன்னேற்ற முன்னணிக் கட்சியில் நடிகை சௌகார் ஜானகி, நடிகர்கள் வி.கே.ராமசாமி, மேஜர் சுந்தரராஜன் ஆகியோர் வெள்ளியன்று சேர்ந்துள்ளதாக முன்னணியின் செயலாளர் ராஜசேகர் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். ★

படம் எடுத்து ஆடுகிறார் ஜெயலலிதா

கொத்தவரும் நச்சுப்பாம்பை அடித்து விரட்டுவோம்!

"படம் எடுத்து ஆடும் நச்சுப்பாம்பு ஜெயலலிதா, நம்மைக் கொத்தவருகிறது. அதை அடித்து விரட்டுவோம்" என்று வீரப்பன்கூறினார்.

கீழ தஞ்சை மாவட்ட ஜானகி அணி அ.தி.மு.க சார்பில் மயிலாடுதுறை நகரப் பூங்காவில் நேற்று பொதுக்கூட்டம் நடந்தது. முன்னாள் அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசியதாவது:-

ஓர் அம்மையார்(ஜெயலலிதா) பட்டப்பகலில் வங்கியில் புகுந்து கொள்ளை அடித்த திருடனைப்போல் கட்சியின் தலைமை நிலையத்தில் புகுந்து நான் தான் பொதுச் செயலாளர் என்று கூறிக் கொண்டார். அந்தக் கள்ள நோட்டு செலாவணி இன்று நாட்டில் புழங்கிக்கொண்டு இருக்கிறது.

நச்சுப்பாம்பு

இன்றைக்கு சூது மதி படைத்த அந்த அம்மையார் வஞ்சக வேலையில் ஈடுபட்டிருக்கிறார். உடன் இருந்தே கொல்லும் வியாதிபோல அவர் செயற்பட்டார். புரட்சித்தலைவர் இருக்கும் போதே அந்த வேலையில் ஈடுபட்டார்.

வீரப்பன் பேச்சு

ஜெயலலிதா

விஷத்தைக் குடிக்கவும்முடியும். அந்த விஷத்தைத் தொண்டையில் நிறுத்திவைத்துக் கொள்ளவும் முடியுமென சிவபெருமானைப்போல எம். ஜி ஆர். அப்போது செய்துவந்தார். பரம சிவன் கழுத்தில் கிடந்த பாம்பு போல அந்த அம்மையார் இருந்து கொண்டு கருடா சவுக்கியமா? என்று கேட்கும் பாணியில் செயற்பட்டார்.

புரட்சித் தலைவர் மறைந்த பிறகு அந்த விஷப்பாம்பு இன்று விளையாட ஆரம்பித்திருக்கிறது. நம்மைக் கொத்தப்பார்க்கிறது. படம் எடுத்துக்காட்டி மிரட்டுகிறது. மூன்று ஆண்டு காலமாக காங்கிரஸ் தீட்டிய சதித் திட்டங்களுக்குக் காட்டிக் கொடுக்கும் குள்ளநரியாகவும் அந்த அம்மையார் செயற்பட்டது உண்டா? இல்லையா?

இப்படி வீரப்பன் சொன்னார். ★

பண்ருட்டி குறித்து காளிமுத்து

ஊடலை விரட்டி கூடலை உருவாக்கும் பாணன் பண்ருட்டி என்று காளிமுத்து கடுமையாக விமர்சித்துள்ளார்.

முன்னாள் அமைச்சரும் அ.தி.மு.க. (ஜானகி அணி) துணைப் பொதுச் செயலாளருமான காளிமுத்து எழுதியுள்ள கட்டுரையில் இது குறித்து கூறியிருப்பதாவது:-

பழைய காலத்தில் ஊடல் கொண்ட இருவர்க்கிடையே சமாதானம் செய்யும் வேலையைப் பாணன் செய்வானும்! பண்ருட்டி பாணனுக்கு பொருத்தமான வேலை! தொடர்க! இப்போதே நாவலர் 3 மணி 4 மணி நேரம் முதியோர் 'உளறல்' உளறுகிறார். கூட்டத்தில் சிக்கிக்கொண்டவனின் நிலை பரிதாபத்திலும் பரிதாபம். எழுந்தால் உட்காருங்களய்யா என்கிறார்.

எம்.ஜி.ஆர்.பாமுர்லா என்று அவர் பேசலாம். ஜெயலலிதாவும் பேட்டி கொடுக்கலாம், தன்னையே முதல்வராக்க வேண்டுமெனும் மோகதாகத்துடன், ஆனால் பாணன் பண்ருட்டி ஊடல் தீர்த்து உலக உருண்டையில் எங்கெங்கோ இருப்பதைக் கொண்டுவர காங்கிரஸ் சைக்கிளில் பின்னால் தொத்திக் கொள்ள முயற்சிசெய்கிறார்!

இவ்வாறு காளிமுத்து எழுதியுள்ளார். ★

ஜெயலலிதா போட்டி?

ஆண்டிப்பட்டி தொகுதியில் ஜெயலலிதா போட்டியிடுவார் என்று முன்னாள் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் திட்டவட்டமாகத் தெரிவித்தார். ★

இருந்த இடம் தெரியாமல் போகும்

அவர்கள் கூடாரம் வளர்ந்து வரும் கட்சி அல்ல. பல வண்ணத்தில் எரியும் மத்தாப்பு. அது விரைவில் கருகி இருந்த இடம் தெரியாமல் போகத்தான்போகிறது.

இவ்வாறு அவர் பேசினார். ★

தமிழகத்திலிருந்து

ஜானகிக்கு மூன்றாவது கணவர்தான் எம்.ஜி.ஆர்.

ஜெயலலிதாவை என் மகள் என்று சொன்னால் குற்றமா?

இப்படிக் கேட்டார் முன்னாள் அமைச்சர் நெடுஞ்செழியன்.

குடந்தையில் அ தி மு க. (ஜெ) கூட்டத்தில் நெடுஞ்செழியன் பேசியதாவது;-

வீரப்பன் சட்சிக்காரர் அல்ல. எம். ஜி. ஆர்., அ. தி. மு. க. வை தொடங்கியபோது உறுப்பினராக கூட இருக்க முடியாது என்று கூறியவர் வீரப்பன். அவர் இன்றுதான் எம். ஜி. ஆரின் வாரிசு போல் பேசுகிறார்.

மக்கள் மத்தியில் விளக்கினால்தான் விவரங்கள் புரியும். ஜானகியை எம். ஜி. ஆர். அரசியலுக்கு அறிமுகப் படுத்தவே இல்லை. ஜெயலலிதாவை தான் கொள்கை பரப்பு செயலாளராக நியமித்தார். யாரை நியமித்தாரோ அவர் எங்களிடம் இருக்கிறார்.

ஜெயலலிதாவை என் மகள் என்று சொன்னால், உன்மகளா? நெடுஞ்செழியன் - விசாலாட்சிக்கு பிறந்தவளா என்று ஆபாசமாக பேசுகிறார்கள். நீ அங்கே (ஜெயலலிதா அணியில்) இருக்கலாமா என்று கேட்கிறார்கள்.

40 வயது ஜெயலலிதா அணியில் 71 வயது நெடுஞ்செழியன் இருப்பது குற்றமாம். நான் முதல் அமைச்சராக இருந்தபோது ஜெயலலிதா பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

அருவருப்பாக இருக்கிறது

40 வயது ராஜீவ்காந்தியிடம் அனுபவம் நிறைந்த பழுத்த தலைவர்கள் பணிபுரியவில்லையா? அதுபோலத்தான் நானும் ஜானகியை அன்னை என்கிறார்கள். எனக்கு அருவருப்பாக இருக்கிறது இருந்தாலும் இப்படி கேட்டுத்தான் ஆக வேண்டும். இந்த அன்னைக்கும் கணபதிப் பட்டுக்கும் பிறந்தவர்களா இவர்கள்?



எம். ஜி. ஆர்.

எம். ஜி ஆரின் மனைவி ஜானகியை விமர்சிக்கக் கூடாது. அவர்கள் கேவலமாக பேசுவதால், எழுதுவதால் நானும் பேச வேண்டி உள்ளது.

ஜெயலலிதாவை கண்டபடி பேசுகிறார்கள். ஜானகி எத்தனை கல்யாணம் பண்ணியவர். 2-வது கல்யாணம்தான் கணபதி பட். 3-வது சல்யாணம் எம். ஜி. ஆருடன் என்கிறார்கள்.

கேவலமாக பேசினால் பதிலடி தர வேண்டி இருக்கும் என எச்சரிக்கிறேன். ஜானகியை வீரப்பன் கொண்டு வந்ததால் வீட்டு விவகாரங்கள் சந்தி சிரிக்கின்றன. 'கணபதி பட்டு'வின் மகன் பெயர் என்ன தெரியுமா? வி. என். ஜே. சுரேந்திரன் என்பது ஆகும்.

இவரா வைக்கம் நாராயணி அம்மாள் மகன்? வெட்கக்கேடு வெளியே வரணுமா? வர வைத்து விட்டாயே.

இவ்வாறு நெடுஞ்செழியன் பேசினார். ★

தமிழ்நாடு அரசியல் 1984 சட்டசபை தேர்தல் நிலவரம்

கட்சிகள்	போட்டியிட்ட இடம்	வெற்றிபெற்ற இடம்	வாக்குகள்	சதவீதம
அ.தி.மு.க. அணி				
அ.தி.மு.க.	159	133	80,44,273	37,09
காங்கிரஸ்	71	62	35,69,872	16.49
கா.கா.தே.கா.	4	2	1,20,704	0,56
மொத்தம்	234	197	111,734,849	54,14
தி.மு.க. அணி				
தி.மு.க. (முஸ்லீம் லீக் உட்பட)	198	24	63,96,518	29,49
மார்க்சிஸ்ட் கம்யூ.	17	5	6,32,574	2.92
இந்திய கம்யூ.	16	2	5,32,575	2,46
பார்வர்ட் பிளாக்	3	1	93,031	0,43
மொத்தம்	234	32	76,54,698	35.31
ஜனதா	16	3	4,93,374	2,27
சுயே	990	2	14,35,894	6,62

மாதவி - ஜெயலலிதாவுக்கு இனி துறவறம்தான்!

"கோவலனுடன் கடைசிவரை வாழ்ந்தவள் கண்ணகி. மாதவி ஜெயலலிதாவுக்கு இனி துறவறம்தான்" என்று ப. உ. சண்முகம் கூறினார்.

விழுப்புரத்தில் திருமண வைபவமொன்றில் பேசுகையில் திரு. சண்முகம் சொன்னதாவது;

கோவலனைத் தான் கண்ணகி கொன்றாள் என்று இன்றைக்கு தமிழ் நாட்டிலே ஒரு விஷமத்தனமான பிரசாரத்தில் சிலர் இறங்கி உள்ளனர். கோவலனுடன் கடைசி காலம் வரை வாழ்ந்தவள்தான் கண்ணகி. இதை நாடு நன்றாக அறியும். கோவலனுக்கு மாதவி என்பவள் இடையில் வந்தவள் தான். ஆனால் அவள் கடைசி வரை கோவலனுடன் இருக்கவில்லை. துறவியாகத்தான் அவள் வாழ்க்கையை கழிக்க வேண்டி இருந்தது.

மதுரைக்கு நீதி கேட்டு புறப்பட்டவள் தான் கண்ணகி. அதைப் போல காங்கிரஸ் இழைத்த துரோகத்தை மக்களிடம் எடுத்து காட்ட நீதி கேட்டு தமிழகம் எங்கும் புறப்பட்டு விட்டார் ஜானகி.

ஆகவே தோழர்களே, நயவஞ்சகர்கள் நண்பர்கள் உருவில் வருவார்கள். அவர்களை நம்பி ஏமாந்து விடாதீர்கள். மணமக்களே உங்கள் வாழ்க்கையிலும் ஒரு மாதவியை குறுக்கிட வைத்து விடாதீர்கள். எச்சரிக்கையாக இருங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

எந்தக் கோவிலிலும் உண்மையான சாமி சிலை இல்லை:

சட்டசபைக்கு வீரப்பனை வரவிடக்கூடாது!

எந்தக் கோவிலும் உண்மையான சாமி சிலை இல்லை. அதற்கு காரணம் யார்? வீரப்பன். அவரை மீண்டும் சட்டசபைக்கு வரவிடக் கூடாது என்று நெடுஞ்செழியன் கூறினார்.

மன்னார்குடி தேரடி திடலில் அ. தி. மு. க. (ஜெயலலிதா அணி) பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் முன்னாள் அமைச்சர் நெடுஞ்செழியன் கலந்து கொண்டார்.

நெடுஞ்செழியன் பேச்சு!!

அவர் பேசியதாவது:- எப்போதுமே திருமண வீட்டில் தாலி கூட கட்டியிருக்க மாட்டார்கள். சாப்பாட்டிற்கு கூட உறவினர்கள் சென்றிருக்க மாட்டார்கள். ஆனால் மூன்றும் மனிதர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா? திருமணத்தைப் பார்ப்பதைவிட சாப்பாட்டிற்குத்தான் முன்னால் நிற்பார்கள். அதுபோன்று தான் வீரப்பன் பதவிக்காக முன்னால் நின்றார். அமைச்சரவையில் 4ஆவது இடம் வகித்தவர் முந்திக்கொண்டு நான்தான் முதல்வர் இல்லையெனில் ஜானகிதான் என்றுகூறி கட்சியை சின்னாபின்னமாக்கி விட்டார்.

கோஷ்டி சண்டைகள் எம். ஜி. ஆர். இருக்கும்போது நடந்திருந்தால் என்னவாகும். அந்த சண்டைகள் நடந்திருக்குமா? கோஷ்டி தேவை என்றால் பணம் வேண்டும்.

இப்போது எந்த கோவிலாவது உண்மையான சிலைகள் உண்டா? தேடணும். அப்படி பணம் சேர்த்தவர்களிடம் தான் ஆட்களுக்குதீனி போடும் கோஷ்டி இருக்கிறது. ★

தேர்தலில் போட்டியிட

சிவாஜிக்கு தடை வருமா?

சிவாஜி கணேசன் ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் வரி பாக்கி வைத்துள்ளதால் தேர்தலில் அவர் போட்டியிட முடியுமா என்பது குறித்து சிக்கல் எழுந்துள்ளது.

சினிமா நடிகர்-நடிகைகள் 67பேர்கள் வருமான வரிப்பாக்கி வைத்துள்ளனர்.

ஒரு லட்சமும் அதற்கு மேலும் வருமான வரிப் பாக்கி வைத்துள்ளவர் [illegible] கணேசன், ஸ்ரீ தேவி, ஸ்ரீபிரியா, சுகாசினி, ரஜனிகாந்த், ஹேமமாலினி, ராஜேஷ்கன்னா, ரேகா உட்பட 66 பேர் வருமான வரிப்பாக்கி வைத்துள்ளனர்.

இத்தகவலை மாநிலங்களவையில் அமைச்சர் பாஞ்சா கூறினார்.

வரிப்பாக்கிவைத்திருப்பவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது. ஆகவே சிவாஜிகணேசன் தேர்தலில் போட்டியிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ★

யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காக கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்து விடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி ஓடி வருவான் !!

உதயசேவை

இலவசம்! இலவசம் !!

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

கடுகுக் கதை

புத்தாண்டுச் சபதங்கள்!

- வில்வம் பசுபதி -

ராமநாதன் கையில் பத்திரிகையுடன் வீடு முழுவதும் ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டு திரிந்தார். மத்தியானம் சாப்பிட்டபின் சிறிது நேரம் தூங்க வேண்டும். அவருக்குச் சினம் பற்றிக்கொண்டு வந்தது. 'இந்த வீட்டில் எதுவும் வைச்ச இடத்தில் இருக்காது. அரைமணித்தியாலமாய்த் தேடுகிறேன். காணவில்லை' சத்தம் போட்டார்.

ஹோலில் இருந்து எதையோ தைத்துக் கொண்டிருந்த மனைவி சாந்தா 'நீங்க என்ன தேடுறீங்கன்னு நாங்க மூக்கு சாத்திரம் பார்க்கிறதா' என்றாள்.

'உனக்கு மூக்கு நீளம். இப்ப நாக்கும் நீளுது. பாயைத் தேடுகிறேன். ஒரே புளுக்கம். மெத்தையில் படுக்க உடம்பு எரியுது. எங்கே பாய்' மீண்டும் சத்தம் போட்டார்.

பாய்க்கா இவ்வளவு ஆரவாரம். அறைக்குள்ளே உமா விரித்துப்படுத்து ஏதோ புத்தகம் படிக்கிறாள்' என்றாள் சாந்தா.

அறைக்குள் இருந்த உமா 'பாயாப்பா தேடுறியள். இதோ கொண்டு வாறன்' என்று எழுந்தாள்.

'அப்பா பாய் தேடலை உனக்கு வரன் தேடுறார். ஆளைப்பார் ஆளை' என்றான் கட்டிலில் இருந்த சுதாகர். சுதாகருக்கு அடிக்கக் கை ஓங்கிவிட்டுப் பாயைக் கொடுத்தாள் உமா.

பாயை வாங்கி ஹோலில் விரித்த ராமநாதன் 'கொஞ்சநேரம் தூங்கப்போறன். ரேடியோ, டி.வி. போட்டியளோ கெட்ட கோபம் வரும்' என்று சொல்லிக்கொண்டு படுத்தார்.

அறைக்குள் இருந்த சுதாகர் சிரித்தான். பின் உச்சஸ்தாபியில பாட்டுப் பாடினான்.

'பாய் விரித்துப் படுப்பவர்கள்
வாய் திறந்து தூங்குகிறார்
பஞ்சணையில் நான் படுத்தும்
நெஞ்சிலோர் அமைதியில்லை'

ராமநாதன் சத்தம் போட்டார். 'டேய் சுதாகர் கத்தாதையடா. உமா மாதிரி ஏதாவது புத்தகம் படிடா'

'உமா எங்கேயப்பா புத்தகம் படிக்கிறா. குமுதம் படிக்கிறா. ஸ்ரீதேவியின் மூக்கு நீளமா, ராதிகாவின் மூக்கு நீளமா என்று ஆராய்ச்சி பண்றா' என்றான்.

'உன் அம்மாவின் மூக்குத்தாண்டா நீளம். இது தெரியாதா' என்றார் மனைவி சாந்தாவைப் பார்த்து.

இந்த நேரம் பார்த்து வேலைக்காரன் ராமு சொன்னான், புத்தகம் என்றவுடன் ஞாபகம் வருதய்யா. உங்க ஆபீஸ் நண்பர் புத்தகம் ஒன்று கொடுத்தார். மேசை மேலே வச்சிருக்கேன்'

'அது புத்தகம் இல்லே, புதுவருடப் பஞ்சாங்கம் அப்பா' என்றாள் உமா.

ராமநாதன் பாயைவிட்டு எழுந்தார். ''என்னது, புதுவருடப் பஞ்சாங்கம் வந்திட்டுதா? டேய் சுதாகர், உமா, சாந்தா எல்லோரும் கிட்ட வாங்கோ. புதுவருடப் பலன் பார்ப்போம்'' என்று சொல்லிக் கூப்பிட்டார் உற்சாகத்துடன்.

ராமநாதனைச் சுற்றவர எல்லோரும் கூடினர். பஞ்சாங்கத்லதைப் பார்த்து ஒவ்வொருவருடைய பலன்களையும் உரத்துப் படித்தார். உமாவினுடைய நட்சத்திரப் பலனைப் பார்க்கும் போது ''கேதுவும், ராகுவும் மூன்றும் வீட்டிலிருந்து நாலாம் வீட்டிற்குப் போகிறார்கள். சனி எட்டிப்பார்க்கிறான்'' என்று சொல்லிக் கொண்டு போனவரை சுதாகர் இடைமறித்தான். ''இவங்க எல்லாம் வாடகை வீட்டிலா இருக்காங்கா. ஒரு மாத நோட்டீஸ் இல்லாமல் எப்படி வீட்டை விட்டுப் போகலாம்'' என்றான் சுதாகர்.

எல்லோரும் ''கொல்'' என்று சிரித்தார்கள். ''வாயை மூடடா'' என்று சொன்ன ராமநாதன் ''புது வருடத்தில் இரண்டு சபதம் செய்யப் போகிறேன்'' என்று சொன்னார். சாந்தா உட்பட எல்லோரும் என்ன சபதம் என்று கேட்டனர்.

''புதுவருடத்தில் இருந்து பொடி போடமாட்டேன். வெற்றிலை போடமாட்டேன்'' என்று அறிவித்தார்.

''அட போயும் போயும், பொடி சமாசாரம் தானா'' என்று அலுத்துக் கொண்டான் சுதாகர்.

''புதுவருடத்தில் இருந்து பகலில் நித்திரை செய்யமாட்டேன்'' என்றாள் உமா. நானும் அதே சபதத்தைச் செய்யப் போகிறேன்'' என்று அறிவித்தான் சுதாகர்.

மூவரும் இப்போ சாந்தாவைப் பார்த்தனர். அம்மாவின் சபதத்தை அறியஆவலாய் இருந்தனர்.

வேலைக்காரன் ராமு கேட்டான் ''போன வருடம் கூட நீங்க மூணு பேரும் இதே மாதிரிச் சொன்னீங்க இதே சபதம் எடுத்தீங்க இல்லையா''.

''அப்படிக் கேளடா, இவர்களும் இவர்கள் சபதமும், வா, வேலையிருக்கு. புதுவருடப் பலகாரம் செய்யணும்'' என்று சொல்லிராமுவை அழைத்துப் போனாள் சாந்தா சமயலறைக்கு.

''அதையாவது செய் சாப்பிடலாம் என்றார் ராமநாதன். ★

காதல் சின்னம் தாஜ்மகாலுக்கு பூமிக்குள் இருந்து ஆபத்து!

அழியாத காதலின் அடையாள சின்னமாக விளங்கும் தாஜ்மகாலுக்கு பூமிக்கு அடியில் ஆபத்து தோன்றி உள்ளது.

தாஜ்மகால் கட்டி முடிக்கப்பட்ட 4 வருடத்திலேயே சுவர்களில் லேசான வெடிப்புகள் ஏற்பட்டன. இதுபற்றி அப்போது மன்னராக இருந்த அவுரங்கசீப் சிறையில் இருந்த தந்தை ஷாஜகானுக்கு கடிதம் எழுதி தெரிவித்ததோடு ஆலோசனையும் கேட்டார்.

தாஜ்மகால் சுவர்களில் ஆண்டுதோறும் கீறல்கள் விழுவது அதிகரித்ததே தவிர குறையவில்லை. பல்வேறு நிபுணர்கள் இதுபற்றி தீவிரமா ஆராய்ச்சி செய்தனர். காற்று மண்டலத்தில் ஏற்படும் தட்பவெட்ப மாறுபாடுதான் இதற்கு காரணம் என்று அவர்கள் கூறினார்கள்.

'' யுனஸ்கோ '' வில் இருந்து 2 இத்தாலிய கட்டிடகலை நிபுணர்கள் அவசரமாக இந்தியா வந்து தாஜ்மகாலை ஆராய்ச்சி செய்தனர். அவர்களும் வெடிப்புகளை சுட்டிக்காட்டி ''அழகு வழியும் இந்தக் கோவிலுக்கு ஆபத்து நெருங்குகிறது'' என்று சொல்லிப் போனார்கள்.

இந்திய அரசும் ஆபத்தை உணர்ந்து அபாய சங்கு ஊத வேண்டிய கட்டாயத்தை அறிந்து எல்லா நடவடிக்கைகளையும் துரிதமாக செய்தது. ஆனாலும் ஏற்பட்ட கீறல்களை அடைக்கத்தான் முடிந்ததே தவிர கீறல்கள் விழுவதை நிறுத்த முடியவில்லை.

ஆராய்சி நிபுணர்கள் இப்போது 'தாஜ்மகால்' பற்றி திடுக்கிட வைக்கும் புதிய கருத்து ஒன்றை வெளியிட்டு இருக்கிறார்கள்.

'' இதுவரை தாஜ்மகால் மேல் மட்டத்தை தான் நாம் சிந்தித்து வந்தோம். தாஜ்மகாலுக்கு பூமியின் அடியிலும் ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது'' என்று கூறினார்கள்.



அவர்கள் கூற்றுப்படி தாஜ்மகாலில் ஏற்பட்ட வெடிப்புகளுக்கு தட்பவெப்ப நிலை மட்டும் காரணம் அல்ல. பூமிக்கு அடியில் ஏற்பட்ட மண் தன்மையின் மாற்றமும் காரணம் என்று தெரிய வருகிறது.

தாஜ்மகால் அருகில் ஆக்ரா நதி ஓடுகிறது. இந்த நதியின் தண்ணீர் பூமிக்கு அடியில் சிறுசிறு அலைகளாக பரவி போகின்றன. இதனால் மண்ணின் தன்மையில் மாற்றம் நிகழ்கிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தாஜ்மகால் 282 அடி உயரமும், 320 அடி குறுக்களவும் கொண்டது. இதன் மேல் பகுதி விமானத்தின் எடை 12 ஆயிரம் டன் ஆகும்.

பூமிக்கு அடியில் மண் தன்மை மாறுவது காரணமாக தாஜ்மகாலின் 12ஆயிரம் டன் எடையை தாங்கி நிற்கும் அஸ்திவாரமும், தூண்களும் பலம் குறைந்து காணப்படுகிறது. சுவர்களில் வெடிப்பு ஏற்பட இதுவே முக்கிய காரணமாக இருக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

இந்த கருத்தை மெய்ப்பிக்க தாஜ்மகாலின் அருகில் போரிங் மூலம் அடிமண்ணை தோண்டி எடுத்து சோதனை செய்ய வேண்டும். அதன் பின் அதற்கு தீர்வு காணும் வழிகளை மின்னல் வேகத்தில் செய்யலாம் என்றும் நிபுணர்கள் யோசனை கூறி இருக்கிறார்கள்.

உலக அதிசயங்களில் ஒன்றும், இந்தியாவின் பெருமையை சர்வதேச அளவில் உயர செய்வதுமான தாஜ்மகால் ஒரு தெய்வீக காதலின் நினைவுச் சின்னம். காதலுக்கு என்றும் அழிவில்லை. அதுபோல் தாஜ்மகாலுக்கும்...? ★

கலப்படம் ஒரு புறம்! போலி மறுபுறம்!!

நுகர்வோரை வாட்டும் இரண்டு கொடுமைகள்

வயிற்றோட்ட நோயினால் குழந்தை அவதிப்படுகின்றது.

மருந்து கொடுத்தும் வயிற்றோட்டம் நிற்பதாக இல்லை.

அரோறூட்மா கொடுத்தால் வயிற்றோட்டத்தைக் கட்டுப்படுத்தலாம் என்று தந்தைக்குக் கூறப்படுகின்றது.

அருகில் இருக்கும் கடைக்கு தந்தை ஓடுகின்றார். அரோறூட்மா டின் ஒன்றை வாங்கி வந்து, மாவைக்கரைத்து குழந்தைக்குப் பருக்குகிறார்கள்.

வயிற்றோட்டம் நிற்பதாக இல்லை எப்படி நிற்கும்? கரைத்துக்கொடுத்தது அரோறூட்மாவாக இருந்தால்தானே வயிற்றோட்டம் நிற்பதற்கு?

அப்படியானால் அரோறூட்மா டின்னில் இருந்தது என்ன? வெறும் சோளன்மாஎன்றுசொன்னால் நம்புவீர்களா?

அண்மையில் வெளியிடப்பட்ட அரசாங்க ரஸாயனப் பகுப்பாய்வாளர் திரு. எம். ஒ. சி. டி. சில்வாவின் ஆண்டறிக்கையை வாசிப்பின்......வாசிப்பவர்களுக்கே வயிற்றோட்டம் வந்துவிடும்!

அந்தளவுக்கு சந்தையில் விற்கப்படும் உணவுப்பொருள்கள் பற்றிய திடுக்கிடும் தகவல்கள் அதில் வெளியிடப்பட்டுள்ளன;

அரோறூட் என்ற பெயரில் விற்கப்பட்ட 42 டின்கள் அரசாங்க இரசாயனத் திணைக்களத்தினால் பரிசோதிக்கப்பட்டது.

அவற்றில் 37 ரின்களில் சோளன் மாத்தான் காணப்பட்டது. மருந்துக்கும் அரோறூட்மா இருக்கவில்லை.

மூன்று ரின்களில் அரோறூட் மாவுடன் சோளன்மா கலந்து விற்கப்பட்டது.

ஆக 2 ரின்களில் மட்டுமே சுத்தமான அரோறூட்மா இருந்தது.

சந்தையில் விற்கப்படும் அரோறூட்மா டின்களில் 5 சதவீதமே சுத்தமான அரோறூட்மா.

1985 ஆம் ஆண்டில் விற்பனைக்குவந்த அரோறூட்மா டின்களில் 9 சதவீதமே சுத்தமானது. எஞ்சியவையில் கலப்படமே இல்லை. அப்படியானால்...அத்தனையும் போலி.

நெய்க்கும் இதேநிலை. 42 போத்தல்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் 39 போத்தல்களில் ஒரு சொட்டு நெய் தானும் கிடையாது. ஒரு போத்தலில் நெய்யுடன் வெளிநாட்டுக்கொழுப்பு கலக்கப்பட்டிருந்தது.இரண்டு போத்தல்களில் மட்டுமே சுத்தமான நெய் காணப்பட்டது. அடுத்தது நல்லெண்ணை. சந்தையில் விற்பனைக்கு விடப்பட்டுள்ள நல்லெண்ணையில் பதினெட்டு நிறுவனங்களில் தயாரிப்புக்களில் நல்லெண்ணையே கிடையாது.

20சதவீதம் தேங்காய் எண்ணையுடன் கலந்த நல்லெண்ணைதான் விற்கப்படுகின்றது.

பருத்திவிதை எண்ணெய் ஆகியவற்றையும் கலந்து நல்லெண்ணை என்றபெயரில்விற்கப்படுகின்ற ரஸாயன எண்ணை கலக்கப்பட்ட நல்லெண்ணையால் உடல் நலத்துக்கே ஆபத்து.

கோப்பித்தூள் என்ற பெயரில் வறுக்கப்பட்ட வெளிநாட்டு மரக்கறித்தூள் கலக்கப்பட்டு விற்கப்படுகின்றது.

22 சதவீதமான கோப்பிப்பக்கற்றுக்களில் மரக்கறித்தூள் தான் கலக்கப்பட்டுள்ளது.

1985 இல் கோப்பித்தூளில் கலப்படமே இல்லை.

எப்படி?

சந்தைக்கு வந்த கோப்பிப் பக்கற்றுக்களில் 51 சதவிதமானவை சுத்தமான கோப்பியே. எஞ்சியவையில் மருந்துக்கும் கோப்பியே இல்லை.

பின்னர் எப்படி கோப்பியில் கலப்படம் வரும்? கோப்பி என்ற பெயரில் 100 க்கு 100 வேற்றுப் பொருளை விற்றால் அது கலப்படமாகாதே; அதற்குப் பெயர்தான் போலி.

தேங்காய் எண்ணையிலும் இதே நிலை தான். 13 போத்தல்களைப் பரிசோதித்ததில் ஒரே ஒரு போத்தலில் மட்டும் சுத்தமான தேங்காய் எண்ணை இருந்தது.

ஒலிவ் எண்ணையில் நாற்பது சதவீதம் தேங்காய் எண்ணை கலந்து உள்ளது.

வினாகிரியில் 50 சதவீதமே சுத்தமானது. தேனில், சீனி கலக்கப்பட்டுள்ளது.

இப்படி ரஸாயனப் பரிசோதகர் திரு சில்வா தனது அறிக்கையில் தெரிவித்து இருக்கின்றார்.

அவரின் ஒரே ஒரு கவலை ''இப்படியான கலப்படம்,போலி உணவுப் பொருள்களை நுகர்வோர் சகித்துக்கொண்டு வாங்குகிறார்களே!'' என்பதுதான்.

விளையாட்டுத் துறை

ஷார்ஜா கிண்ணம் இந்திய அணிக்கு

சாஸ்திரியின் திறமையா? வீரர்களின்திறமையா?

ஷார்ஜா கிண்ணத்தை இந்திய கிரிக்கெட் அணி சுவீகரித்துள்ளது.

ரவிசாஸ்திரி தலைமை வகித்து ஆடிய முதல் சுற்றுப் போட்டியிலேயே இந்தியஅணி சாம்பியனாகியிருப்பது ரவிசாஸ்திரியின் அதிஸ்ரமா?

அல்லது இந்திய அணி வீரர்களின் திறமையா?

எதனால் இந்த வெற்றி கிடைத்தது என்று தீர்மானிக்க முடியாவிட்டாலும் ரவிசாஸ்திரிக்கு பெருமையைத் தேடிக்கொடுக்கும் வெற்றி இது என்பதில் ஐயம் இல்லை.

நடைபெற்ற போட்டிகளின் நிலையை இனிப் பார்ப்போம்.

மார்ச் மாதம் 25 ஆம் திகதி இந்திய இலங்கை அணிகளுக்கிடையேயான ஆட்டத்துடன் ஷார்ஜா கிண்ண சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஆரம்பமானது.

பரபரப்பான இந்தப் போட்டியில் இந்திய அணி 18 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்திய அணி 50ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 219ஓட்டங்களைப் பெற்றது.

கபில்தேவ் 43 பந்துகளில் 48 ஓட்டங்களையும், கே. ஸ்ரீகாந் 32 ஓட்டங்களையும் ஏ. அயூப் ஆட்டமிளக்காமல் 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆர். ரட்ணயக்கா, சி. ராமணயக்கா, அரவிந்த, டி. சில்வா ஆகியோர் தலா இரண்டுவிக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இலங்கை அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 201 ஓட்டங்களைப்பெற்றது.

அரவிந்த டி. சில்வா 88 ஓட்டங்களையும், ஆர். மகாநாம 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

ரவி சாஸ்திரி, நரேந்திர ஹிர்வாணி, ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்த ஆட்டத்தின் சிறப்புவீரராக அரவிந்த டி. சில்வா தெரிவானார்.

27 ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் இந்திய நியூசிலாந்து அணிகள் மோதின.

இந்தப் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவானது.

இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப்பெற்றது.

மொகிந்தர் அமர்நாத் 102 ஓட்டங்களையும், நவ்ஜோத்சிங்சித்து 88 ஓட்டங்களையும் பெற்றனர்.

றிச்சட் ஹற்லி 3 விக்கெட்டுக்களையும், டபிள்யூ வற்சன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நியூசிலசந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 194 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

எம் [illegible] ஓட்டங்களையும்,ஆர்.வான்ஸ் 42 ஓட்டங்களையும் றிச்சட் ஹற்லி 35 ஓட்டங்களையும் பெற்றனர்.

நரேந்திர ஹிர்வாணி 4 விக்கெட்டுக்களையும் அஸ்ரப்அயூப் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப்போட்டியின் சிறந்த ஆட்டக்காரராக மொகிந்தர் அமர்நாத் தெரிவானார்.

ஷார்ஜா கிண்ணத்தைப் பெறுவதற்கான இறுதிப் போட்டியில் இந்திய அணியுன் மோதுவது [illegible] என்ற நிலையில் இலங்கை, நியூசிலாந்து அணிகளின் மோதல் நடைபெற்றது.

இதில் இலங்கை அணி படுதோல்விகண்டது.

கபில்தேவ்

நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் எட்டுவிக்கெட்டுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

அன்ரு ஜோன்ஸ் 85 ஓட்டங்களையும், கே. ரதபோர்ட் 65 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஜே ஆர். ரெட்ணயக்கா 2 விக்கெட்டுக்களையும், அசோக்காடிசில்வா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இலங்கை அணி 42 5 ஓவர்களில் 42 5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 159 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

பென்டன் குறுப்பு 46 ஓட்டங்களைப் பெற்றார்.

டி. பாற்றெல் 3. கு கி சி. குலேயன் 2,டபிள்யூ வாற்சன் 1,டி மொறிஸ்1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் சிறப்பு வீரராக. அன்ரு ஜோன்ஸ் தெரிவானார்.

ஷார். ஜா. கிண்ணத்தை சுவீகரிப்பதற்கான இறுதிப் போட்டியில் இந்திய அணியும் நியூசிலாந்து அணியும் மோதின.

இந்தப் போட்டியில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்த அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

அணித்தலைவர் ரவி சாஸ்திரி 68 பந்துகளில் 72 ஓட்டங்களையும் கபில்தேவ் 26 பந்துகளில் 49 ஓட்டங்களையும் அமர்நாத் 58 ஓட்டங்களையும் பெற்றனர்.

சைபீல்ட் 2 விக்கெட்டுக்களையும் ஹற்லி, குலேயன்,பெற்றல், மெறிஸன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நியூசிலாந்து அணி 45.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 198 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ஜோன்றைற் 55 ஓட்டங்களையும், இறெற்பாத் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

நரேந்திர ஹிர்வாணி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியின் சிறப்பு வீரராக ரவி சாஸ்திரி தெரிவானார்.

இந்தச் சுற்றுப்போட்டியின் சிறப்பு வீரராக நரேந்திர ஹிர்வாணி தெரிவானார்.

இவர் மொத்தமாக 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

இந்திய அணி கலந்து கொண்ட அனைத்துப் போட்டிகளிலும் கபில்தேவின் பங்கு சிறப்பாக இருந்துள்ளது.

இறுதிப் போட்டியில் கூட அவர் 26பந்துகளில் எடுத்த 49 ஓட்டங்கள் தான் இந்திய அணியின் வெற்றியை உறுதிப்படுத்தியதாகவும் விளையாட்டு லக அவதானிகளிடையே கருத்து நிலவுகிறது. ★

- சண். ஜோண்சன் -

3 அடி உயரமுள்ள

குள்ளமணிக்குத் திருமணம்!

மணமகள் ஐந்தரை அடி உயரம்!!

3 அடி உயரமுள்ள சிரிப்பு நடிகர் குள்ளமணிக்குத் திருமணம் நடக்கிறது.

குள்ளமணி

ஏராளமான தமிழ்ப் படங்களில் நடித்து இருப்பவர் குள்ளமணி. இவர் பெயரை சொன்னாலே "குபீர்" சிரிப்பு வரும். 3 அடி உயரம் உள்ள இந்த மாமனிதர் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்.

இதில் ஒரு வேடிக்கை என்ன வென்றால் இவர் மணமுடிக்கப் போகும் பெண் 5½ அடி உயரம் உள்ளவர். மணமகள் பெயர் லட்சுமி. புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் கிராமத்தைச் சேர்ந்தவர்.

31 வயது

குள்ளமணிக்கு 31 வயதாகிறது. 600, படங்களில் தலை காட்டி இருக்கிறார். திடீர் என்று இவருக்கு திருமண ஆசை எப்படி வந்தது?

அவரே சொன்னார்; திருமணம் செய்து கொண்டால் பிறக்கும் குழந்தை என்னைப் போலவே குள்ளமாகப் பிறந்து விடக்கூடாது என்று நினைத்துத் தான் இதுவரை திருமணமே செய்து கொள்ளாமல் இருந்தேன்.

நான் இப்போது திருமணம் செய்து கொள்ளப் போகும் லட்சுமி எனது உறவுப் பெண். அவளே என்னைத் திருமணம் செய்து கொள்ள முன் வந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டேன்.

குள்ளமணி

நான் அந்தப் பெண்ணிடம் சென்று என்னை நீ திருமணம் செய்து கொண்டால் குள்ளன் மனைவி என்று கேலியும், கிண்டலும் செய்வார்கள். இதையெல்லாம் நீ தாங்கும் சக்தி கொண்டவளாக இருக்க வேண்டும் என்று கூறினேன். அதற்கு அவள் உங்களைக் கணவராக அடைய மனப்பூர்வமாக சம்மதிக்கிறேன் என்று கூறினாள்.

விஜயகாந்த் அக்கா

அதன் பிறகு மதுரையில் டாக்டராக இருக்கும் நடிகர் விஜயகாந்தின் அக்காவிடம் லட்சுமியை அழைத்து சென்று எங்களுக்குக் குழந்தை பிறக்குமா? அப்படிப் பிறந்தால் அது குள்ளமாக இருக்குமா? என்று எனது சந்தேகத்தைக் கேட்டேன். அதற்கு அவர் அப்படி எல்லாம் இருக்காது என்று சொன்னார் இது எனக்குப் புதிய தெம்பைத் தந்தது.

உடனே திருமணத்திற்கு நான் குறித்து விட்டேன். எங்கள் திருமணம் வருகிற மேமாதம் 25ஆந் தேதி சென்னையில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன், ஜெய்சங்கர், விஜயகாந்த் ஆகியோர் தலைமையில் நடக்கிறது.

ஜெய்சங்கர் சார் இல்லை என்றால் எனக்கு வாழ்க்கையே இல்லை, அவர்தான் எனக்கு வாழ்க்கை கொடுத்தார்.

நான் விமானத்தில் பயணம் செய்வேன் என்றோ, "ஏர் கண்டிஷன்" காரில் பயணம் செய்வேன் என்றோ கனவில் கூட நினைக்கவில்லை. நிஜ வாழ்க்கையில் நான் இந்த சுகங்களை அனுபவிக்க ஜெய்சங்கர் தான் காரணம்"

இவ்வாறு மகிழ்ச்சி பொங்கக் கூறினார் நடிகர் குள்ளமணி.

தவக்களை
மந்திரியாவாரா?

இப்போது கோடம்பாக்கம் போனாலே, "நீ எந்தக் கட்சி? நான் இந்தக் கட்சி!" என்ற நட்சத்திரங்களின் 'டயலாக்' தான் கேட்க முடியும். அண்ணன் ராமலிங். 'மந்திரி ஆவேன்! என்று பசு மீது ஆணையிட்டுக் கூறுகிறார். மதுரைகாந்த் நடிகர், "முதல்வர் ஆவேன்!" என்கிறார் ராசாக்கள், "தமிழகத்தைக் காப்பாற்றுவோம்!" என்று குதித்துக் கொண்டு இருக்கிறார்கள்! பழம் பெரும் நடிகர் தவக்களையும் அரசியலில் குதிக்க இருக்கிறாராம்! எந்தக் கட்சியை பார்த்து குதிக்க இருக்கிறார் என்று கேட்டபோது "இன்னும் முடிவு செய்யவில்லை!" என்று பதிலளித்தார்! நாளை தவக்களை நிதி மந்திரியானாலும் ஆகலாம். தமிழகத்தின் ஜாதகம் அப்படிப் பட்டது.

கி... கி... கி... கி... கிசு கிசு

இந்திப் பட உலகில் நடிகை டிம்பிள் கபாடியா திடீரென்று புகழின் உச்சக்கட்டத்தைப் பிடித்துள்ளார். முதல் இடத்தில் இருக்கும் ஸ்ரீதேவிக்கு போட்டியாக வந்துவிட்டார்.

ஆனால் டிம்பிள் திடீர் என்று படங்களில் நடிப்பதைக் குறைத்துக் கொள்ள தீர்மானித்து விட்டார். இதற்கு இரண்டுகாரணம். ஒன்று கணவர் ராஜேஷ்கன்னாவுடன் இணைந்து வாழ வேண்டுமென்பது. இரண்டாவது காரணம் தனது 15 வயது மகள் டிவிங்கிளை கதாநாயகியாக அறிமுகப்படுத்த தீர்மானித்து இருப்பது.

★★

நதியா இந்தியில் நடிக்க இருக்கும் சமாசாரம் உங்களுக்குத் தெரியுமா? நதியாவுக்கு கிரிக்கெட் என்றாலே உயிராம். கிரிக்கெட் ஆட்டக்காரர் வெங்சர்க்கார் என்றால் நடிகைக்குக் கொள்ளை ஆசையாம். (எதுக்கும் அவர் ஜாக்கிரதையாக இருந்தால் நல்லது) அவர் ஆட்டத்தைப் பார்த்தால் படப்பிடிப்பைக்கூட ரத்துச் செய்வாராம். சமீபத்தில் அண்ணன் சர்க்காரை அணுகிய நதியா தான் நடித்த படம் ஒன்றின் விடியோ கேசட் கொடுத்தார். அடுத்தநாள் சர்க்கார் போன்செய்து "நீங்க இந்திக்கு எப்ப வரப் போறீங்க?" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கேட்டாராம்.

★★

"மைதிலி என்னைக் காதலி" படம் மூலம் பிரபலமான அமலாவுக்கு இப்போது இந்தித் திரையுலகிலும் மார்க்கெட் சூடுபிடிக்க ஆரம்பித்துவிட்டது. அங்கிருக்கும் 'சூப்பர் ஸ்டார்கள்' கூட அமலாவை கதாநாயகியாகப் போடும்படி படத்தயாரிப்பாளர்களை வற்புறுத்துவதாக கேள்வி.

ரஜனிகாந்தின் மேற்பார்வையில் அமலா இந்திப்படங்களில் நடிப்பதாகவும், அவர் பம்பாய் செல்லும்போதெல்லாம் அங்கு ரஜனிகாந்திற்கு சொந்தமான பங்களாவில்தான் தங்குவதாகவும் இப்போது 'கிசு கிசு' கிளம்பியுள்ளது. இதைவிட பெரிய 'கிசு கிசு' என்னவென்றால் அமலாவை ரஜனிகாந்த் மணந்துகொண்டு ஒரு 'சின்ன வீடு' செட்டப் செய்துகொள்ளப் போகிறாராம்.

★★

சமீபத்தில் சிவச்சந்திரரை ஐந்தாவது கணவராக்கிக்கொண்ட (நமக்குத் தெரிந்தவரை) லக்ஷ்மிகரமான நடிகை தனது திருமணத்தைச் சமீபத்தில்தான் பகிரங்கப்படுத்தினார். ஆனால், திருமணம் பலமாதங்களுக்கு முன்னே ஆகிவிட்டதாம். இதை இவ்வளவுநாள் ரகசியமாக வைத்திருந்தது ஏன்? லக்ஷ்மிகரமான நடிகையின் வயதுக்கு வந்த மகள் சாந்தா மீனுவுக்கு டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கும் மாப்பிள்ளையைப் பிடித்து பதிவுத்திருமணம் செய்து வைத்துவிட்டார். மகளுடைய திருமணம் முடிந்தபிறகே தனது புதுமணத்தை வெளியிட்டால் நல்லது என்று இப்போது வெளியிட்டாராம்! மினி ரகசியம்! மகளின் பதிவுத் திருமண விஷயத்தை ரகசியப்படுத்தி வைத்திருக்கிறாராம் அந்த நடிகை.

★★

குயிலாக வந்த நடிகைக்கு பூ விலங்கு மாட்டி கதாநாயகியாக்கி விட்டார்கள். ஆனால் அவரோ வாய்ப்பில்லாமல் கவர்ச்சி நடனம் ஆடிவருகிறார். இவரிடம் தமிழ்ப் பத்திரிகை புகைப் படக்காரர்கள் படம் எடுக்கச்சென்றால் என்படம் தமிழ் பத்திரிகைகளில் வரக்கூடாது, என்று அடம் பிடிக்கிறாராம். பிறகேன் தமிழ்ப் படங்களில் அரைகுறை ஆடையில் இவர் நடிக்கிறார்.

★

மாஜி பள்ளி ஆசிரியரான தத்துவ நடிகர், தீவிர ரஜனீஷ் சாமியார் பக்தர் ஆகிவிட்டார்! இதனால் சில தாய்க்குலங்களுக்கு கலக்கம் ஏற்பட்டுள்ளதாம்! தாய்க்குலங்கள் தங்கள் மக்களை "அந்த மனுசன் கூட நடிக்கிறபோது மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்" என்று எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். செக்ஸ் சாமியார் ரஜனீசுக்கு, சென்னையில் ஒரு ஆச்சிரமம் அமைப்பது பற்றி வாத்தியார் தீவிரமாக யோசித்துக்கொண்டிருப்பதாக கோடாம்பக்கம் செய்தி கூறுகிறது.

★★

ரேவதியை இரண்டு சிறு தயாரிப்பாளர்கள் அணுகியபோது, கால்ஷீட் கொடுக்க மறுத்து விட்டார். முதற்படம் சிறிய பட்ஜெட் என்பதாலும் பெரிய ஹீரோ இல்லை என்பதாலும் தான், தோல்வி அடைந்தது. அதனால் விஜயகாந்த், சத்யராஜ், கமல், போன்ற ஹீரோக்களுடன் மட்டுமே நடிப்பேன்! என்று அடம்பிடித்துக் கொண்டிருக்கிறார்! எனவே இப்போது கார்த்திக்குடன் நடிக்கும் 'இதயத்தாமரை' தவிர வேறு எந்தப்படமும் இவருக்கு இல்லை.

★★

பூந்தோட்டக் காவல்காரன்!
விஜய்யின் சொந்தப்படம்

பெற்றோர் ஜாதகம் பார்த்துப் பேசிமுடிக்கும் பெண்ணைத்தான் திருமணஞ் செய்வேன்!

நடிகர் விஜயகாந்த் இதனை 'சஞ்சீவி'க்குத் தெரிவித்தார்.

எனது தங்கைக்கு திருமணம் பேசிக் கொண்டிருக்கின்றேன். அது முடிந்த கையோடு இந்த வருட இறுதிக்குள் எனது திருமணம் நடக்கும்— என்றும் விஜயகாந்த் குறிப்பிட்டார்.

நடிகர் விஜயகாந்த் சொந்தப்படம் தயாரிக்கின்றார்.

படத்தின் பெயர் 'பூந்தோட்டக் காவல்காரன்'

அடுத்தமாத நடுப்பகுதியில் இப்படம் திரைக்கு வருகின்றது.

★

"ஊமைவிழிகள்" படத்தில் விஜயகாந்துடன் ராதிகா.

விபவ புத்தாண்டில் உங்கள் பலன்கள்!

விபவ புத்தாண்டு உதயமாகும் போது உதய லக்கினம் சிங்கமாகவும் இலக்கினாதிபதி சூரியன் 9 இல் உச்சம் பெற்று குருவுடன் சஞ்சரிப்பதும் குரு இலக்கினத்தை நற்திருஷ்டி செய்வதும் உலக நாடுகளிடையே சமாதானத்தையும் ஒளிமயமான எதிர்காலத்தையும் காட்டுகின்றது.

முற்றாக நல்ல ஒற்றுமையுடன் கூடிய சமாதானம் என்று கூறமுடியாது. பல்வேறு துறைகளிலும் சீர்திருத்தங்கள் ஏற்பட இடமுண்டு மக்கள் வாழ்வில் நல்ல முன்னேற்றம் காணப்படும். அரசியல் ரீதியில் சமாதான ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகலாம். அவ்வாறு ஏற்படும் ஒப்பந்தங்களும் சரியான முன்னேற்றத்தைக் கொடுக்க இடமில்லை. பலத்த கடுமையான எதிர்ப்புக்கள் மத்தியில் தத்தளிப்பு ஏற்படும்.

இலங்கையைப் பொறுத்தவரை அரசியல் நிலைமை ஒரு திருப்பத்தை அடையும். வெளிநாடுகளின் ஒத்தாசையும் கிடைக்கும். பாதுகாப்புப் பலப்படுத்தப்படும். நாணய மதிப்புக் குறையும். எனினும் பொதுவாக நல்ல பலன் இருக்கும். விவசாய விருத்தியும் உப உணவுப் பயிர்ச்செய்கையில் நல்ல முன்னேற்றமும் கலை, கலாசார, பாரம்பரிய சம்பிரதாயங்கள் மக்கள் மனதில் வேரூன்றியும் நிற்கும். மனப்பயம் இருக்கும். அறிஞர்கள் மறைவுக்கும் இடமுண்டு.

பன்னிரு ராசிகளின் புதுவருஷப் பலன்கள் தரப்படுகின்றன;-

மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு அட்டமத்துச் சனியானது நீங்கப் பெற்று நல்ல ஒளிமயமான எதிர்காலம் பிறக்கப் போகின்றது. ஜன்மத்தில் குரு சஞ்சாரம் செய்வதால் இடையிடையே சில இடையூறுகள் வர இடமுண்டு ஆனி மாதத்தின் பின்பு நல்ல முன்னேற்றம் கிடைக்கும். உடல் நலம் நன்றாக இருக்கும் குடும்பத்தில் ஒளி வீசும். நினைத்த காரியம் கைகூடும். வர்த்தகர்களுக்கு நல்ல இலாபங் கிட்டும். கொடுக்கல் வாங்கல் பிணக்குக்கு இடையூறில்லை. உத்தியோகத் துறையினர் மேன்மை அடைவர். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நடைபெறலாம். மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றமும் கிடைக்கும். அம்பாளை வணங்கினால் நல்லது. கலைஞர்கள் நலம் பெறுவர். இந்த ராசிக்காரருக்கு நன்மையான ஆண்டு.

இடபம்

(கார்த்திகை 2 ஆம் 3 ஆம் 4 ஆம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1 ஆம் 2 ஆம் கால்கள்)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு அட்டமத்தில் சனி. குரு சஞ்சாரமும் பலம் குறைவு. உடல் நலம் பாதிக்கப்படும் குடும்பத்தில் அமைதி குறைவு உத்தியோகத் துறையினருக்கு வேலை அதிகமாகும். வர்த்தகர்களுக்கு சாதகமான காலமல்ல. கொடுக்கல் வாங்கலில் பிணக்கு ஏற்படக்கூடும். விவாகம் ஆகாதவர்களுக்கு அவ்வாய்ப்புக் குறைவு. நினைத்த காரியங்கள் கைகூடுவது கஷ்டம்; தடங்கல்கள் ஏற்படலாம். தொழில் பார்க்கும் இடத்தில் விபரீதங்கள் நிகழ இடமுண்டு. கூட இருந்தே குழிபறிப்பார் மறைமுகமான எதிர்ப்புகள் வரலாம். தக்ஷிணாமூர்த்தியையும் சனீஸ்வரனையும் வணங்குதல் நல்லது. கலைஞர்கள் துன்பமடைவர்.

மிதுனம்

(மிருகசீரிடம் 3 ஆம் 4 ஆம் கால்கள் திருவாதிரை, புனர்பூசம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் கால்கள்)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு குரு இலாபத் தானத்திலும் ஏழாம் இடத்தில் சனியும் சஞ்சாரம் செய்கின்றது. நன்மையும் தீமையும் மாறி மாறி ஏற்படும் வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சச்சரவுகள் வரலாம். உடல்நிலை பாதிப்படையும். என்றாலும் அதிக தாக்கம் இராது. உத்தியோகத் துறையினருக்கு வேலைப்பளு, வர்த்தகத் துறையினருக்கு லாபமான காலம் அல்ல. கொடுக்கல் வாங்கல் கஷ்டங்களுக்கு இடமுண்டு. திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நிகழும்.

கடகம்

(புனர்பூசம் 4 ஆம் கால், பூசம், ஆயிலியம்)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு ஆயுள்காரகன் 6 இலும் குருபகவான் 10 இலும் சஞ்சரிக்கிறார்கள் உடல்நலம் நன்றாயிருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகத் துறையினருக்கு நல்ல வருமானம், பதவி உயர்வு, சம்பள உயர்வு கிட்டும். வர்த்தகத்துறையினருக்கு நல்ல லாபங்கிடைக்கும். எதிரியும் நண்பனாவார். கொடுக்கல் வாங்கல் சுமுகமாக இருக்கும். கலைஞர்கள் நன்மையடைவர். கல்யாணம் ஆகாதவர்களுக்குப் பேச்சுக்கால் நிகழும். எண்ணியது கைகூடும். மாணவர்களுக்குக் கல்வித் துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு. பரீட்சையில் சித்தி கிட்டும்.

சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்குச் சனி 5இலும் குரு ஜன்ம ராசியைத் திருஷ்டிப்பதும் நன்மையைக் கொடுக்கும் என்றாலும் ஆனிமாத வியாழ மாற்றத்தால் நல்லதென்று சொல்ல முடியாது உடல்நலம் நன்றாக இருப்பினும் குடும்பத்தில் அடிக்கடி குழப்பங்கள் நிலவக் கூடும். உத்தியோகத் துறையினருக்கு அவ்வளவாக நன்மையில்லை கடமை புரியும் இடத்தில் திரைமறைவில் அநியாயமும் அக்கிரமும் நடைபெறும். நினைத்தது நடவாது. வர்த்தகத்துறையினருக்கு மந்தமான காலம். கொடுக்கல் வாங்கல் கஷ்டம் உண்டு.

கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் கால்கள் அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் கால்கள்)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு சனி 4 இலும் குரு 8 இலும் சஞ்சரிக்கின்றது. ஆனி மாத வியாழமாற்றத்தால் நற்பலன்களுக்கு இடமுண்டு. உடல் நிலை பாதிக்கப்படும். குடும்பத்தில் இடையிடையே குழப்பமும் அமைதியும் மாறி மாறி வரும். உத்தியோகத் துறையினருக்கு நல்ல பலன் வருமானம் அதிகரிக்கும். எண்ணியது கைகூடும். வர்த்தகத்துறையினருக்கு அதிஷ்டமான காலம். கொடுக்கல் வாங்கல் பிணக்கின்றி முடியும். கல்யாணம் ஆகாதவர்களுக்கு நினைத்த இடத்தில் கல்யாணம் நடைபெறும். மாணவர்களுக்குக் கல்வியில் முன்னேற்றம் உண்டு.

துலாம்

(சித்திரை 3ஆம் 4 ஆம் கால்கள் சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3 ஆம் கால்கள்)

இந்த ராசியிற் பிறந்த களுக்கு ஏழரைச்சனி கழிகின்றது. குருபகவான் 7 ஆம் இடத்தில் வருகிறார். தொழில் விருத்தியாகும். வர்த்தகத்துறையினருக்கு நல்ல லாபங்கிட்டும். உடல் நிலை நன்றாக இருக்கும், குடும்பத்தில் அமைதி நிலவும், நினைத்த காரியம் நடக்கும், கொடுக்கல் வாங்கல் திருப்திகரமாக அமையும். திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணம் நிகழும், மாணவர்களுக்குக் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு.

விருச்சிகம்

(விசாகம் 4ஆம் கால் அனுஷம், கேட்டை)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு ஏழரைச்சனி கடைக்கூறு நிகழ்கின்றது. குருவும் 6இல் மறைந்ததால்நல்லபலன் அவ்வளவாக இல்லை. உத்தியோகத்தர்களுக்கு வீண் அலைச்சல், பிரயாணம் மிகுதி. எதிர்பார்த்த பலன் கிடைப்பது கஷ்டம். வர்த்தகர்களுக்கு மந்தமான காலம். கொடுக்கல் வாங்கலில் கஷ்டம் உண்டு. உடல்நிலை பாதிப்படையலாம். குடும்பத்தில் நிம்மதி குறைவு ஆனிமாத வியாழ மாற்றத்தால் சிறிது நன்மைக்கு இடமுண்டு. கல்யாணம் ஆகாதவர்களுக்கு கல்யாணப் பேச்சுக்கள் நிகழும்.

தனு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால்)

"இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு ஏழரைச் சனி நடுக்கூறு நிகழ்கின்றது. ஆனிமாத வியாழ மாற்றம்வரை நற்பலன் உண்டு. உடல் நிலை பாதிப்படையலாம், குடும்பத்தில் அமைதி குறைவு உத்தியோகத் துறையினருக்கு வீண் அலைச்சல்; வர்த்தகத் துறையினருக்கு லாபம் குறைவு. கல்யாணம் ஆகாதவர்களுக்குக் கல்யாணம் நிகழும். ஆனி மாத வியாழமாற்றம் பாதகமாகலாம். என்ன செய்தாலும் குறைகேட்க நேரிடும்.

மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் கால்கள் திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் கால்கள்)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு ஏழரைச்சனி முற்கூறு நிகழ்கின்றது. குருபகவானின் சஞ்சாரத்தால் இவர்களுக்கு நல்லபலன் உண்டு உடல் நிலை பாதிக்கப்படமாட்டாது. குடும்பத்தில் அமைதி நிலவும். உத்தியோகத்தர்களுக்கு வேலைக்கஷ்டம் இருக்கும். வர்த்தகத்துறையினருக்கு நல்ல லாபங் கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் கஷ்டம்; நினைத்த காரியம் கைகூடும் கல்யாணம் ஆகாதவர்களுக்குக் கல்யாணம் நடைபெறும். மாணவர்களுக்குக் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு.

கும்பம்

(அவிட்டம் 3ஆம் 4ஆம் கால் சதயம், பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் கால்கள்)

இந்தராசியிற் பிறந்தவர்களுக்குக் குருபகவானின் பலன்கள் குறைவாகும். உடற்சுகம் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் இடையிடையே பாதிப்புண்டாகலாம். உத்தியோகத்துறையினருக்கு நல்ல முன்னேற்றம் கிட்டும். வர்த்தகத் துறையினருக்கு நல்ல லாபங் கிட்டும் கொடுக்கல் வாங்கல் நன்றாக அமையும். மாணவர்களுக்குக் கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் உண்டு.

மீனம்

(பூரட்டாதி 4ஆம் கால் உத்தரட்டாதி, ரேவதி)

இந்த ராசியிற் பிறந்தவர்களுக்கு சனி 10 இல் இருப்பதால் நல்ல பலன் கிடைக்கும். உத்தியோகத்துறையினருக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. வர்த்தகத் துறையினருக்கு நல்ல லாபங் கிடைக்கும். உடல் நிலை பாதிக்கப்படும் வாய்ப்பு இல்லை. எதிரியும் நண்பனாவார். குடும்பத்தில் நிம்மதி நிலவும். கொடுக்கல் வாங்கலில் கஷ்டம் உண்டு. கல்யாணம் ஆகாதவர்களுக்குக் கல்யாணம் நிகழலாம். மாணவர்களுக்குக் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு ஆனிமாத வியாழமாற்றம் அவ்வளவு நன்மையைத் தராது.

★

வருஷப் பிறப்புக் கருமம்

புத்தாண்டு பிறக்கும் திகதி:-
புதன்கிழமை 13-4-1987
புண்ணிய காலம்:- நண்பகல் 12-45மணி

இக்காலத்தில் சிரசில் கடப்பமிலையும், காலில் வேப்பமிலையும் கலந்து மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்க.

உடை:- பச்சைக் கரையமைந்த பட்டு அல்லது பச்சை நிறப்பட்டு

கைவிசேஷம்:- 13 - 4 - 1988 புதன்கிழமை
பகல் 2-22 மணி முதல் 4 - 10 மணி வரை
14-4-1988 வியாழக்கிழமை
காலை 8-20 மணி முதல் 9-30 மணி வரை

இனி நான் யாருக்காக?

- தலவாக்கொல்லை சௌந்தரராஜன் -

சஞ்சீவி சிறுகதை

அந்த நான்கு சுவர்களுக்கிடையிலிருந்து விடுதலைபெற்றுவெளியே வந்த போது 'விஜேத்' திற்கு வினோதமாக இருந்தது. இருட்டிலேயே இருந்தவனுக்கு வெளிச்சம் கண்களைக் கூசச் செய்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு ஒரு முறை சுற்றிப் பார்த்துக் கொண்டே நடக்க ஆரம்பித்தான்.

எவ்வளவு அழகானது இனிமையானது இந்த உலகம். இதிலெல்லாம் இருந்து தன்னைப் பிரித்து தனிமைப்படுத்தி விட்டார்களே..... மூன்று ஆண்டுகள் முன்னூறு வருடங்கள் கழிந்தது போலிருந்தது அவனுக்கு. அடி, உதை, சித்திரவதை......... அப்பப்பா இவற்றையெல்லாம் தாங்கிக் கொண்டு அவன் இத்தனை நாளும் அந்த நான்கு சுவர்களுக்கிடையில வாடிக்கிடந்தது 'மயூரி'க்காகத்தான்.

மயூரி என்று நினைக்கும் போதே அவனது நடையில் ஒரு வேகம் தோன்றியது. யாழ்ப்பாணத்தில (எங்கோ ஒரு புறத்தில்) பிறந்த அவனுக்கு உறவென்று சொல்லிக்கொள்ள அம்மாவைத் தவிர யாருமில்லை. அப்பா கூட அவன் பிறந்து பன்னிரண்டு வயதாயிருக்கும் போது இறந்துபோனார். அம்மாவும் கூலி வேலைகள் செய்துதான் அவனைப் படிக்க வைத்தாள். விஜேத் படிப்பில கெட்டிக்காரன் தான். ஆனாலும் பட்டங்கள் கிட்டிடும் வாய்ப்பு அவனுக்கு கிடைக்கவில்லை.

மயூரி ஏதோ ஒருவிதத்தில் மிகுந்த தூர உறவென்று அம்மா சொல்லியிருக்கிறாள். அம்மா ஏதோ அவசரங்களுக்குப் பெற்றுக் கொள்ளும் உதவியினூடே தான் விஜேத்திற்கும் அந்த அறிமுகம் கிடைத்தது. இவனும் அடிக்கடி மயூரி வீட்டிற்குப் போய் வருவான். தன் படிப்பு முடிந்து வீட்டிலிருக்கும் காலங்களில் எல்லாம் அவன் அடிக்கடி மயூரி வீட்டிற்குப் போய் வந்ததன் விளைவாகவே அவனுக்கும் மயூரிக்கும் இடையில் ஓர் இறுக்கம் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் காதலாகவும் மாறிப் போய்விட்டது. விஜேத் அடிக்கடி மயூரியிடம் வேலையில்லாதவனுக்கு காதல் பட்டு எதற்காம்'' என்று கூறுவான். மயூரி அப்போதெல்லாம் செல்லமாகச் சிணுங்குவாள். மயூரி அபாரமாக ஒன்றும் அழகில்லை. நடுத்தர நிறம். அமைதி மிக்க சுபாவம். இவைதான் அவளை அவனுக்கு கவரச் செய்தவை. ஒரு நாள் கூட அவளைப்பாராது இருக்கமுடியாத அவனால் இத்தனை வருடங்கள் எப்படியிருக்க முடிந்தது? அவள் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்? என்னைக் கண்டதும் அவளுக்கு அதிர்ச்சியாயிருக்கும். மனதிற்குள் எண்ணிக் கொண்ட அவன் திடீரென பழமைக்கே போய் விட்டான்.

(2)

எத்தனையோ வேலைகளுக்கு விண்ணப்பித்த அவனுக்குத் திடீரென அன்று தபாலில் வந்த கடிதம் ஆச்சரியத்தை ஊட்டியது. கொழும்பிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து நேர் முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்ட கடிதமே அது. கடிதத்தை அவன் முதன் முதலில் கொண்டு ஓடியது மயூரியிடம்தான். அவனது பதற்றத்திற்கு காரணம் புரியாது திகைத்து நின்றவளிடம் ''மயூரி... இதைப் பாரும்...'', ''எனக்கு இன்ரவியூவிற்கு அழைப்பு வந்திருக்கு'' அவன் நீட்டியதை ஆவலுடன் வாங்கிப் பார்த்தவளின் கண்களில் மின்னிய பிரகாசம் திடீரென மறைவில் போயிற்று.

''என்ன மயூரி யோசிக்கிறாய்...'' - விஜேத்.

''விஜேத் உந்த வேலை எனக்குப் பிடிக்கேல்லை இங்க யாழ்ப்பாணத்தில் என்றாலும் பரவாயில்லை. கொழும்பிலையென்றால் .. நான் எப்பிடிப் பிரிஞ்சு இருக்கிறது...'' அவளது குரல் உடைந்திருந்தது. ஒரு நிமிடம் விஜேத் உருகிப்போய்விட்டான். ''என் மீது உயிரையே வைத்திருக்கும் இவளை எப்படி பிரிந்து போவது? அவன் மனதில் தடுமாறினான்.

''மயூரி... முதல் இந்த இன்ரவியூவிற்கு போயிட்டு வாறன் பிறகு வேலை கிடைச்சுதென்றால் யோசிச்சுப் பார்ப்பம்.'' அவன் அவளுக்கு சமாதானம் கூறும் பாவனையில் அனுமதி கேட்டான். அவளால் மனந்திறந்து அனுமதி கொடுக்க முடியவில்லை. விஜேத்தின் வற்புறுத்தலால் ஒருவாறு அவன் இன்ரவியூவிற்குப் போக அனுமதித்தாள்.

மிகுந்த உற்சாகத்தோடு விஜேத் இன்ரவியூவிற்குப் போனான். இன்ரவியூவிலும் கூட அவனுக்குத்தான் வெற்றிகிட்டும் வாய்ப்பு ''இன்ரவியூ'' முடிந்தவன் உடனே திரும்ப முடிவெடுத்துவரும் திகதியையும் குறித்து மயூரிக்கு தந்தி மூலம் அறிவித்திருந்தான் குறிப்பிட்ட தினத்தில் புறப்பட்டு வந்தவனுக்கு அப்போது தான் அந்த பயங்கரம் நிகழ்ந்தது ஆனையிறவு முகாமை பஸ் நெருங்கிய போது .. திடீரென எங்கிருந்தோ வந்து பஸ்ஸிற்கு சற்று தொலைவில் விழுந்த ''ஷெல்'' வெடித்ததால் பஸ்ஸிலிருந்த அனைவரும் நிலை குலைந்து போனார்கள். பெண்கள் குழறத் தொடங்கி விட்டனர். பஸ் நின்று விட்டது. திடீரென பற்றைக்குள்ளிருந்து பாய்ந்து வந்த ''அவர்கள்'' பஸ்ஸில் உள்ள எல்லாரையும் இறங்கச் சொன்னார்கள். சோதனை செய்தார்கள். வன்மத்துடன் ஏசினார்கள். ஒரு சிலரைத் தாக்கினார்கள். இன்னும் என்னென்னவோ... விஜேத்திற்கு இதயம் வேகமாகத் துடித்துக் கொண்டிருந்தது.

திடீரென உயர்ந்த ஒருவனது துப்பாக்கி ''ஐயோ... அம்மா...'' என்றதுடன் பலரை வீழ்த்தியது. விஜேத்திற்கு உடம்பெல்லாம் சில்லிட்டு மயிர் குத்திட்டது. இத்தனைப் பயங்கரத்தை கண்முன்னால்... அடுத்து என்ன நடக்குமோ... பயம் அவனைக் கவ்விக் கொண்டது. எல்லாம் கனவு போல் நடந்தது.

இறுதியாக பலர் போக அனுமதிக்கப்பட்டனர். சிலர் கைது செய்யப்பட்டனர். பஸ் எரிந்து கொண்டிருந்தது. அன்று ஒரு நான்கு பக்க சுவரினுள் போனவன் இன்று தான் வெளியே வருகின்றான்.

(3)

''அண்ணை எங்கால போறியள்'' என்றகுரல் கேட்டு சுயத்திற் வந்தவன் திடுக்கிட்டுப் பேனான். முன்னே வரிசையாக அடுக்கப்பட்ட மணல் மூடைகள். கையில் அதனுடன் அவன். விஜேத்திற்கு ''பக்'' கென்று ஏதோ தொண்டையில் அடைப்பது போலிருந்தது. வியர்த்துக் கொட்டியது. ''என்ன அண்ணை பேசாமலிருக்கிறீங்க. இஞ்சால போகேலாது. அங்க அவையள் இருக்கினம்''. அவன் முடித்ததும் தான் விஜேத்திற்கு உயிரே வந்தது. ஓ! இவன் நம்மவன். அவனது உருவம் துணிவு பேச்சு அத்தனையும் விஜேத்தினுள் ஒரு வகை கோபுரத்தை திடீரெனக் கட்டிக் கொண்டது.

தம்பி நான் எங்கட அம்மாவைப் பார்க்கப் போறன். அவையள் இஞ்சதான் இருக்கினம். மூன்று வருசத்திற்கு முன்னாடி நான் கொழும்பால வாற போது ஆனையிறவில வைச்சு அவையள் பிடிச்சுக் கொண்டு போட்டினம். வீட்டுக்கும் அறிவிக்க முடியலல. மூன்று வருஷத்திற்கு பின்னால் இண்டைக்குத் தான் விட்டினம்... விஜேத் ரத்தினச் சுருக்கமாக தனது நிலையை எடுத்துச் சொன்னபோது அவனின் முகத்தில் அனுதாபம் கலந்த ஒரு புன்னகை மலர்ந்தது.

''அண்ணை இங்க இப்போ யாருமில்லை சனங்களெல்லாம்வெளிக்கிட்டுப் போட்டினம்.'' அவனது பதில் விஜேத்திற்கு தூக்கி வாரிப் போட்டது. ''அம்மா... அம்மா...'' அவளை இனி எங்கே தேடுவது? கால்கள் அவனுக்கு நடுங்கின. அவன் எதுவும் பேசும் நிலையில் இல்லாததால் வேகமாக திரும்பி நடந் [illegible] கசக்கிப் பிழிவது போல இருந்தது. ''அம்மா அம்மா'' என இதயம் திருப்பித்திருப்பி அழுதது. தனக்கென இனி ஆறுதலைத் தரக்கூடிய மயூரியிடம் ஓடினான்.

மயூரியின் வீட்டுவாசலில் வந்து நின்றபோது அவனுக்கு மூச்சு இரைத்தது. சற்று நிதானமாக நின்றுவிட்டு கதவைத் தட்டினான். கதவைத் திறந்தது மயூரியேதான். விஜேத் விநாடிக்குள் அவளை அடையாளம் கண்டு கொண்டான். ஆனால் அவளால் இவனை அடையாளங்காண முடியவில்லை. வரண்டு போனமுகம். மழிக்கப்படாத தாடி இருள் அடைந்த கண்கள். எண்ணெயைக் காணாத மயிர் அவள் வெருட்சியுடன் நின்றாள்.

''மயூரி என்ன யோசிக்கிறாய்...?'' நான்தான் விஜேத் '' அவன் கூறியதும் அவள் அதிர்ச்சியின் எல்லைக்கே போய்விட்டாள். ''விஜேத்விஜேத் நீங்கள் நீ ங்...க...ள்... அவளால் அதற்கு மேல் பேச முடியவில்லை, தடுமாறினாள். கண்ணீர் கொப்பளித்துக்கொண்டு வந்தது.

''ஆமாம் மயூரி நான் விஜேத்தான் உனக்கு அறிவிச்சபடி நான் கொழும்பால வந்த போது என்னை ஆமிக்காரங்கள் பிடிச்சுக் கொண்டு போயிட்டினம். உனக்கு அறிவிக்க வழியே இல்லாததால் தான் அறிவிக்க முடியல்லை'' விஜேத் கூறி முடித்ததும் மயூரி ஓவென்று கதறினாள். ''விஜேத் நான் பாவி விஜேத்... பாவி '' அவள் தலையைத் தூணில் மோதிக் கொண்டாள்.

விஜேத்திற்கு எதுவுமே புரியவில்லை 'நீ என்ன சொல்லுறாய் ..?'' விஜேத் கேட்டதற்கு அவளால் உடனே பதில் சொல்ல முடியவில்லை. கூடிய மட்டும் அழுது தீர்த்து விட்டு சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு கூறினாள். ''விஜேத் நீங்க கொழும்பால வாறதா தந்தி கொடுத்திருந்ததற்காக நான் உங்களை எதிர்பார்த்து இருந்தனான். ஆனால் நீங்கள் வரேல்லை, அண்டைக்கு பிரச்சினை என்று கேள்விப்பட்டனான். உங்களுக்கு எதுவுமே நடந்திராமல் வீடு வந்து சேர வேண்டாத தெய்வங்களே இல்லை. ஆனா நீங்க வரவேயில்ல. அதால... அதால... உங்களுக்கு ஏதாவது நடந்திருக்குமென்று முடிவு கட்டிட்டன்'' அவள் குமுறிக் குமுறி அழுதாள்.

''எனக்கு எதுவுமே நடக்கேல்லை அவையள் என்னைப் பிடிச்சு மூன்று வருஷமா வச்சிருந்து போட்டு இண்டைக்கு விட்டாங்கள்.'' அவன் மெலிதான புன்னகையில் அவளிடம் வந்து சேர்ந்து விட்ட மகிழ்ச்சியில் கூறிய போது ''உங்களுக்கு ஒண்டும் நடக்கேல்லை. ஆனால் எனக்கல்லவோ எல்லாம் நடந்திட்டுது'' அவள் பட்டும் படாமலும் கூறினாள். ''அப்படி என்ன நடந்தது மயூரி...?'' விஜேத் கலவரத்துடன் கேட்டதும், அவள் விஜேத்தின் முகத்தை ஒரு முறை ஆழமாக ஊடுருவிப் பார்த்தாள்-

''எனக்குக் கல்யாணம் ஆயிட்டுது விஜேத்... கல்யாணம் ஆயிட்டுது..' அவள் குமுறினாள்.

விஜேத்திற்கு இடி இறங்கியது போல் இருந்தது. கால்கள் வலு விழந்து போயின. [illegible] இத்தனை நாட்கள் பட்ட கஷ்டங்களின் மொத்த உருவமாக வலித்தது. பேசக் கூட நா எழவில்லை

''மயூரி... நான்...நீ...'' விஜேத்திற்கு அதற்கு மேல் வார்த்தைகள் வரவில்லை. மூன்று வருடங்களாக... யாருக்காகக் காத்திருந்தானோ... யாருக்காக அடிகளை சித்திரவதைகளை தாங்கிக் கொண்டானோ அவளே இன்று... அவனுக்கு மொத்த சித்திரவதையும் இப்போதுதான் கிடைப்பது போலிருந்தது. கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் வரண்டு போன அந்த முகத்தில் வழிந்தோடியது.

''விஜேத் என்னை மன்னியுங்கோ... விஜேத்! நீங்க உயிரோடு இருப்பது தெரிஞ்சிருந்தா கட்டாயம் நான் காத்திருந்திருப்பேன்! உங்களையும் காணாமல்... உங்கள் பதிலும் இல்லாததால் தான் அப்பா எனக்குக் கல்யாணம் பேசி முடிச்சி வச்சிட்டார். நான் தடுத்துப் பார்த்தேன். ஆனால் போராட முடியவில்லை. நிச்சயமா நான் என்னுடையகாதலை அடகுவைக்கேல்லை...'' அவள் அழுகையினூடே கூறி முடித்தாள்,

''மயூரி... இத்தனை நாளும் உனக்காகத்தான் அடி. சித்திரவதை எல்லாம் தாங்கிக் கொண்டு ஓடிவந்தன். ஆனால் இங்க எனக்குக் கிடைக்கிறது பெருத்த சித்திரவதை! இனி நான் யாருக்காக...? எதற்காக இந்த உலகத்தில வாழ வேணும்?'' அவன் கூறிவிட்டு தெருவில் இறங்கி நடந்தான்,

'' விஜேத் ,' என்றழைக்க மயூரி முற்பட்ட போதும் அது தொண்டைக்குள்ளேயே பதுங்கிக் கொண்டது. அதற்குள் அவன் வேகமாகச் சென்று மறைந்து விட்டான். திரும்ப வந்த மயூரி தலையணையில் முகத்தைப் புதைத்து நெஞ்சில் கனத்த சுமை இறங்கு மட்டும் அழுதாள். எத்தனை நேரம் அழுதாளோ அது அவளுக்கே தெரியாது.

வீதியில் நடந்த விஜேத்திற்கு எந்தக் காட்சியும் ரசிக்கவில்லை. இனி அம்மாவை எங்கே தேடிக் கண்டு பிடிப்பது? அம்மா மயூரி அனைவரையுமே இழந்து விட்ட அவனுக்கு தான் ஒரு 'அனாதை' என்றே பட்டது! கால் போன போக்கில் நடந்தான். இனிமைமிக்க இந்த உலகம் அவனுக்கு வெறுப்பை அளித்தது. இதைவிட அந்த நான்குசுவர்களுக்குள் அடைபட்டு இருப்பதே நிம்மதியைத் தரும் போல் இருந்தது. தன்னை மீண்டும் அந்த இருள் சூழ்ந்த அறைக்குக் கொண்டு போக யாரும் இல்லையா...?

(யாவும் கற்பனை)

'டூத்' பிரஷை விழுங்கும் ஆசாமிகள்!

அமெரிக்காவில் பல் துலக்கும் போது 'டூத் பிரஷை' விழுங்கியவரின் எண்ணிக்கை 32 என்று கணக்கெடுப்பு ஒன்றில் தெரியவந்து உள்ளது.

இதில் நான்கு சம்பவங்கள் கலிபோர்னியோவில் இடம் பெற்றன.

குடிபோதையில் பல் துலக்கிய இரண்டு பேரும் பிரஷை விழுங்கி விட்டனர்.

இந்தியாவில் 1960 முதல் 1973 வரையான காலத்தில் 6 பேர் இவ்வாறு டூத் பிரஷை விழுங்கினர் என்று கணக்கெடுப்பு ஒன்று கூறுகின்றது.

நம் நாட்டில் எத்தனை பேர் பிரஷை விழுங்கினரோ!

பொது அறிவுப்போட்டி இல. 2

1. அழுக்கைப்போக்க உதவுவது எது ?... ... தண்ணீர் / சவர்க்காரம்
2. மீன்களைப்பிடிக்க எது வேண்டும்? ... ... வலை / தூண்டில்
3. தண்ணீர் சூடாவது எதனால்? ... ... அடுப்பினால் / நெருப்பினால்
4. ரயில் ஓடுவதற்கு எது வேண்டும்? ... .. சில்லு / தண்டவாளம்
5. தம்பிகளில் சிறந்தவர் யார்? ... ...விபீஷணன் / இலக்குமணன்
6. குளிர்ச்சி கூடியது எது? ... ... கடல் / குளம்
7. சம்பல் அரைக்க எதுவேண்டும்? ... ... அம்மி / குழவி
8. மணி அடிப்பதற்கு எதுவேண்டும்? ... ... கை / நாக்கு
9. யார் பெயருடன் 'ஜி' உண்டு? ... ... காந்தி / நேரு
10 எழுதுவதற்கு அவசியமானது எது? ... ... பேனைகூர் / மை
11. காவியக் கதையை வளர்த்தவர் யார்? ... ... கூனி / சகுனி
12. எங்கே அதிக சத்தம் வரும்? ... ... பாடசாலை / சந்தை

நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். பரிசுக்கான காசோலைகள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்; நேரில் வர வேண்டியதில்லை.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து 20 4.88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக்கிடைக்கக் கூடியதாக பின்வரும் விலாசத்துக்கு அனுப்புங்கள்.

பொது அறிவுப்போட்டி இல:2
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது அறிவுப்போட்டி இல:1இன் சரியான விடைகளும் பரிசுபெற்றவர்களின் விவரங்களும் அடுத்த சஞ்சீவியில் பிரசுரமாகும்.

வசந்த சொர்க்கம் காண்பேன்!

கூவும் குயிலும் செவ்வாய்க்
கிளியும் சோலை மரத்தில்
தாவும் அணிலும் இணைந்து
தோதாய்க் கூடிக் குலவும்
யாவும் நோக்கும் நிலவும்
வானில் உலவி ஒளிரும்
பூவும் வண்டின் வரவால்
பூத்துக் கேலி செய்யும்

எங்கோ எனக்காய்ப் பிறந்தோன்
என்றோ ஒருநாள் வருவான்
நங்கை நானும் பாடியே
நயமாய்க் கவிதை செய்வான்
அங்கே மலர்ந்த மலரும்
அழகாய்க் கவிழ்ந்து வெட்கும்
தங்கிப் பார்த்த நிலவும்
தலையை முகிலுள் மறைக்கும்

வானம் பன்னீர் தூவும்
வரம்பில் வெள்ளம் பாயும்
தேனைக் காவும் பூவும்
தென்றல் பட்டுச் சிலிர்க்கும்
கானக் குயிலும பாடும்
கிளியும் போட்டி போடும்
நானும் வாழ்வை ரசிக்கும்
நாட்கள் இதுபோல் ஏது?

மேகம் கொஞ்சம் விலகும்
மேவிப் பார்ப்பான் கதிரோன்
தாகங் கொண்ட பூமி
தானும் வெள்ளம் குடிக்கும்
தேகம் குளிர்ந்த செடிகள்
தேசு கொண்டு சிரிக்கும்
சோகம் மறந்து நானும்
வசந்த சொர்க்கம் காண்பேன்!

— அபிரா—

தாய் சொல்லைத்தட்டாத 19 வயது மாணவன்

இந்த உளவியல் விசித்திரத்தை நம்பினால் நம்புங்கள்!

கனடாவைச் சேர்ந்த டொம் என்ற இளைஞன் வயது 19.

பாடசாலைக்குச்சென்று வந்தான் அவன். தொற்று நோய் பிடித்து மாண்டு விடுவேனே என்ற மனப்பயம் அவனைப் பிடித்தது.

தினமும் ஐம்பது தரத்துக்கு மேல் அவன் தனது கைகளைக் கழுவி வந்தான். அடிக்கடி குளித்து வந்தான்.

மனப்பயம் அதிகரித்து மனக்கோளாறை அவனுக்கு ஏற்படுத்தியது. இதனால் பாடசாலையில் இருந்து விலக்கப்பட்டான்.

அவன் ஒரு நாள் தாயாரிடம் முறையிட்டான் ''அம்மா, இனி நான் வாழ்ந்து பிரயோசனமில்லை'' இப்படி அவன் தாயாரிடம் சொன்னார்

''போ. நீயே உன்னைச் சுட்டுக்கொள்''– இப்படி அம்மா பதிலளித்தாள்.

22 கலிபர் ரைபிளை எடுத்துத்தன்னைத்தானே சுட்டுக் கொண்டான் டொம். குண்டு ஒன்று அவனின் தலையில் இடது முன்பக்க மூளைக்குள் சென்று தங்கி விட்டது.

அதிர்ஷ்டவசமாக டொம் உயிர்தப்பி விட்டான் ஆனால் குண்டு தாக்கியதால் டொமுக்கு பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

ஆனால் டொமுக்கு இருந்து வந்த மனக்கோளாறு நீங்கி விட்டது. தினமும் 50 தரம் கைகழுவி, குளிக்கும் பழக்கத்தை அவன் கைவிட்டான்.

தன்னைத்தானே தலையில் சுட்டதன் மூலம் மனக்கோளாறை நீக்குவதற்குத் தேவையான நரம்புச் சத்திர சிகிச்சையை டொம் மேற்கொண்டான் என்று உளவியல் நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

துப்பாக்கிக் குண்டு தாக்கிய மூளைப்பகுதி தான் அவனுக்கு மனக்கோளாறை ஏற்படுத்தியதாம்.

இப்போது டொம் கல்லூரிப்படிப்பைத் தொடருகின்றார். சாதாரண மனிதனாக வாழத் தொடங்கி விட்டான்.

இத் தகவல் பிரிட்டிஷ் உளவியல் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

*

பூமியைத் தாக்கிய வால்நட்சத்திரம்பற்றிய

புதிய தகவல்

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பூமியில் வந்து மோதிய ஒரு வால் நட்சத்திரத்தின் விளைவால், பல பூதாகரமான பிராணிகளும், பிற உயிரினங்களும் மடிந்துள்ளதாக, ஒரு அமெரிக்க விஞ்ஞானியின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

ரொனால்ட் ஜி. பிரின் என்ற விஞ்ஞானி, மாஸ்ஸசுஸிட்ஸ் தொழில் நுட்ப நிலையத்தில் மேற்கொண்ட ஆய்வில் மேற்சொன்ன உண்மை வெளியிட்டுள்ளது.

சுமார் ஆறரைக்கோடி வருடங்களுக்கு முன்பு அந்த வால் நட்சத்திரம் பூமியில் மோதியிருக்கலாம் என்றும், இதைத் தொடர்ந்து பெய்த அமிலமழை 'பாட்டரி' அமிலத்தை விட விஷம் மிகுந்ததாகும் என்றும் பிரின் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் பூமி மற்றும் நீருக்கடியில் வசித்த பல உயிரினங்கள் பாதிக்கப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

''இது நூறு கோடி ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் அரிய நிகழ்ச்சி ஆகும்'' என்று அவர் தெரிவித்தார்.

''தனது கோட்பாடு இந்த நிகழ்வினால் ஏற்பட்ட அழிவின் தீவிரத் தன்மை பற்றி விளக்குவதாக இருக்கும்'' என்று பிரின் குறிப்பிட்டுள்ளார்.

*

மது குடித்தால் மார்பு புற்று நோயா?

பெண்கள் மது குடிப்பதால் மார்புப் புற்று நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகிறது

பழைய ஒப்பந்தங்களைத் தேடிக் கண்டு பிடிக்கும் புதிய ஒப்பந்தக்காரர்!

உள்ளும் புறமும்

- குறுமுனி -

உலக சரித்திரம் புரட்டப்படுகின்றது.

முதலாம் உலக மகா யுத்த நினைவுகளை மீட்கத் தொடங்கியிருக்கின்றார் தர்மிஷ்டர்.

ஒன்றாக இருந்த ஜேர்மனியுடன் சோவியத் யூனியன் சார்பில் லெனின் செய்த ஒப்பந்தம் ஒன்றை தர்மிஷ்டர் அண்மையில் நினைவுபடுத்தினார்.

1918 இல் லெனின் ஜேர்மனியுடன் அந்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்.

அந்த ஒப்பந்தம் போன்றதே 1987 இல் தான் செய்து கொண்ட ஒப்பந்தம் என்பது தர்மிஷ்டரின் கூற்று.

சோவியத் தலைவர் கோர்பச்சேவ் எழுதிய 'புதிய சிந்தனை' நூலில் இருந்தும் இதற்கு தர்மிஷ்டர் ஆதாரங்காட்டியிருக்கின்றார்.

அமைதி ஒப்பந்தம் ஏற்படும் முன்னர் ஒரு முறை தர்மிஷ்டர் லெனின் கொள்கைகள் பற்றிக் கருத்து ஒன்றை வெளியிட்டிருந்தார். கிராமங்கள் மின்சாரமயப்படுத்தப்பட வேண்டும் என்ற லெனினின் ஒரே ஒரு கொள்கையை மட்டும்தான் ஏற்பதாக அப்போது தர்மிஷ்டர் கூறியிருந்தார்.

ஒப்பந்தத்துக்குப் பின்னர்தான், 1918 இல் லெனின் செய்து கொண்ட ஒப்பந்தம் போன்றதே தான் 1987 இல் செய்து கொண்டதும் என்று கூறியிருக்கின்றார்.

1918 இல் லெனின் செய்து கொண்ட ஒப்பந்தம்தான் என்ன?

அக்டோபர் புரட்சி சோவியத்தில் 1917 இல் ஏற்பட்டது.

லெனின் அதிகாரத்துக்கு வந்தார். பொதுவுடமைத் தத்துவம் சோவியத்தில் நடைமுறைக்கு வந்தது.

அச்சமயம் சோவியத் யூனியனில் உள்நாட்டு யுத்தமும் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் ஜேர்மனி, சோவியத் யூனியனை பயமுறுத்தத் தொடங்கியது.

ஜேர்மனியை உலகமே அப்போது எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தது.

மேற்கிலே பிரிட்டனும் அமெரிக்காவும்; கிழக்கிலே சோவியத் யூனியனும் ஜேர்மனிக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருந்தன.

லெனினால் இரண்டு யுத்தங்களையும் சமாளிக்க முடியாதிருந்த சமயம்......

ஜேர்மனியுடன் அமைதி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ள லெனின் விரும்பினார்.

ஜேர்மனியும் அதற்கு இணங்கியது. 5 கோடி 60 லட்சம் சோவியத் பிரசைகளுடன் கைப்பற்றப்பட்ட சோவியத் பிரதேசத்தைத் தங்களுக்குத் தந்தால் ஒப்பந்தம் செய்துகொள்ளத் தயார் என்று ஜேர்மனி முரட்டியது. இதை லெனின் ஆதரவாளர் சிலர் வன்மையாக எதிர்த்தனர்.

ஆனால் லெனின் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் என்றார்; பின்னர் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டார்.

அந்த ஒப்பந்தம்தான் 'பிரஸ்ட் அமைதி ஒப்பந்தம்' என்று பெயரிடப்பட்டது.

இப்படி பழைய சரித்திரத்தை சிங்கள மக்களுக்கு அண்மையில் விளக்கிக் கூறியிருந்தார் தர்மிஷ்டர்.

1957 பண்டா-செல்வா ஒப்பந்தம், 1965 டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு நடந்தது என்ன? அவற்றைக் குழிதோண்டிப் புதைக்க அளிக்கப்பட்ட பங்கு என்ன?

அவற்றை நிறைவேற்ற அனுமதித்து இருப்பின் 1987 ஒப்பந்தம் ஏற்பட்டு இருக்குமா?

இவை எல்லாம் கேள்விகளாகவே மறைந்து விடும்.

பதில்களாக பழைய தூசு பிடித்த ஒப்பந்தங்களைத் தான் தர்மிஷ்டர் தேடிக் கண்டுபிடித்துத் தட்டிக்கொண்டு வருவார்.

தெற்காசியாவின் பழம் பெரும் இராஜதந்திரி அல்லவா அவர்.

தனது இமாலயத் தவறுகளை மறைக்கப் பழைய குப்பைகளைக் கிளறுவதைத் தவிர வேறு என்ன அவரால் செய்யமுடியும்?

இப்படி அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகின்றன.

★

வெள்ளைமாளிகை ஆட்சி

கறுப்புநிற தலைவருக்கு கிடைக்குமா?

உலக உலா

என்.பி.சீலன்

வெள்ளைக்கு இல்லை கள்ளச்சிந்தை!

ஆனால் வெள்ளை நிறத்தவருக்கு......

இதற்கான சோதனை அமெரிக்காவில் நடந்து கொண்டு இருக்கிறது.

எதிர்வரும் நவம்பரில் அமெரிக்காவின் 40 ஆவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

குடியரசுக் கட்சியின் சார்பில் தற்போதைய உபஜனாதிபதி ஜோர்ஜ் புஷ், ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது.

குடியரசுக்கட்சி மாநிலங்கள் ரீதியில் நடத்திய பூர்வாங்கத் தேர்தல்களில் திரு. புஷ் அமோக வெற்றியைக் குடியரசு வருடாந்த மாநாட்டு டெலிகேட்டுக்கள் மத்தியில் இருந்து பெற்றுவிட்டார்.

ஜனநாயகக் கட்சியின் நிலை என்ன?

உருப்படியான வேட்பாளர் ஒருவர் ஜனநாயகக் கட்சிக்குக் கிடைக்குமா?

இந்த இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள ஜனநாயகக் கட்சிக்கு மேலும் ஒரு சோதனையைச் சமாளிக்க வேண்டியுள்ளது.

ஜனநாயகக்கட்சி வேட்பாளரைத் தெரிவு செய்ய இதுவரை நடைபெற்ற கட்சியின் பூர்வாங்கத் தேர்தல்களில் மசாசூஸெட்ஸ் கவர்னர் மைக்கல் டுகாகிஸ், கறுப்பு இனத்தலைவர் வண. ஜெஸி ஜாக்ஸன் இருவருக்கும் இடையே நெருக்கமான போட்டி இடம்பெறுகின்றது.

ஜனநாயகக் கட்சியின் வருடாந்த தேசிய மாநாடு எதிர்வரும் ஜூலையில் அட்லாண்டாவில் நடைபெறவிருக்கின்றது.

இதுவரை நடைபெற்ற ஜனநாயகக் கட்சி பூர்வாங்கத் தேர்தல்களில் திரு. டுகாகிஸ் 604 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றிருக்கின்றார்; வண. ஜெஸி ஜாக்ஸன் 598 பிரதிநிதிகளின் ஆதரவைப்பெற்றிருக்கின்றார்: ஆறு வாக்குகள் மட்டுமே ஜாக்ஸனுக்குக் குறைவாகக் கிடைத்துள்ளது.

50 மாநில பூர்வாங்கத் தேர்தல்களில் இதுவரை 33தான் நடைபெற்றுள்ளன. எஞ்சிய மாநில பூர்வாங்கத் தேர்தல்கள் ஜூலைக்குள் முடிவடையும்.

தேசிய மாநாட்டில் ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தைப் பெற ஒருவர் 2082 டெலிகேட்டுக்களின் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும்.

பூர்வாங்கத் தேர்தலில் வெற்றிக்கு மேல் வெற்றியீட்டி வரும் வண. ஜெஸி ஜாக்ஸன் ஜனநாயகக் கட்சித்தலைமைப் பீடத்துக்குத் தலையிடியைக் கொடுத்திருக்கின்றார்:

அவர் கறுப்பு இனத்தவர் என்பதே தலையிடிக்குக் காரணம்!

ஜெஸி ஜாக்ஸன் ஒரு மதகுரு. கறுப்பு இனத்தலைவர். கறுப்பு இனமக்களின் குடியுரிமைக்காகப் போராடி வருபவர்.

கறுப்பு இனத்தலைவர் டாக்டர் மார்டின் லூதர் கிங் வழியில் செயல்படுபவர்.

இருபதாண்டுகளுக்கு முன்னர் டாக்டர் மார்டின் லூதர் கிங் கொலை செய்யப்பட்டார்.

அமெரிக்க சனத்தொகையில் 12 சதவீதமானோர் கறுப்புஇன மக்கள்!

1955இல் அமெரிக்காவில் கறுப்பு இனப் போராட்டம் டாக்டர் கிங்கினால் தீவிரமாக்கப்பட்டது.

அலபாமா மாநிலத்தில் பஸ்ஸில் கறுப்பு இனத்தவருக்குத் தனி ஆசனம் கொடுக்கப்பட்டது.

அதை வன்மையாக எதிர்த்து டாக்டர் கிங் இயக்கம் தொடங்கினார்.

கறுப்பு இனமக்கள் பஸ்களில் ஏற மறுத்தனர். நடந்தே தங்கள் அலுவல்களை முடித்துக் கொண்டனர். மைல் கணக்கில் கால் கடுக்க நடந்துசென்றனர்.

அமெரிக்காவில் மூனில் ஒரு கறுப்பு இனத்தவர் வறுமைக்கோட்டின் கீழே வாழ்கின்றனர்.

வெள்ளையர்களில்பத்தில் ஒருவர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர்.

கறுப்பு இனத்தவரில் 9 சதவீதமானோர் ஆசிரியர்களாகவும் 3சதவீதமானோர் சட்டத்தரணிகளாகவும் இருக்கின்றனர்.

கறுப்பு இனமக்களின் பூரண ஆதரவைப் பெற்றவராக டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்குக்குப் பிறகு வண. ஜெஸி ஜாக்ஸன் விளங்குகின்றார்.

ஜாக்ஸன் வெள்ளை இனத்தவரிடையே பத்துச் சதவீத ஆதரவையே பெற்றிருக்கின்றார்

இந்தநிலையில் அவரை ஜனநாயகக்கட்சி வேட்பாளராக நவம்பர் 4இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டி வெள்ளை மாளிகை செல்ல முடியுமா?

ஆனால் ஜனநாயகக் கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு போல் கேர்க் சொல்கிறார்:

''ஜாக்சன் மக்களிடையே நம்பகத்தன்மையையும் மரியாதையையும் விசுவாசத்தையும் பெற்று விட்டார்'' — என்று.

ஆனால் கறுப்பு இனத்தவரை ஜனாதிபதியாக ஏற்கும் மனப்பக்குவம் அமெரிக்க வெள்ளையருக்கு இன்னும் வரவில்லையே என்று ஜனநாயகக் கட்சியின் பெரும்பாலான தலைவர்கள் கருதுகின்றனர்.

ரோப்பர் அமைப்பு நடத்திய கருத்துக் கணிப்பு ஒன்றில்,

திரு மைக்கல் டுகாகிஸை ஜனாதிபதி வேட்பாளராகவும்,

வண. ஜெஸி ஜாக்ஸனை உபஜனாதிபதி வேட்பாளராகவும் நியமிப்பின் வெள்ளைமாளிகையைக் குடியரசுக் கட்சியிடமிருந்து கைப்பற்றலாம் என்பது தெரிவித்துள்ளது.

என்னதான் மனித உரிமை பற்றி வீராப்புப் பேசினாலும் தோலின் நிறத்தில் தான் அமெரிக்க ஜனநாயகமே தங்கியுள்ளது போல் தெரிகிறது.

வெள்ளை மாளிகையினுள் கறுப்பு இனத்தவர் பிரவேசிக்கக்கூடாது என்றகொள்கை வெற்றிபெறின்,

அது அமெரிக்காவின் மனித உரிமைப் பிரசாரத்துக்கு [illegible] வைப்பதாக அமைந்து [illegible]

★

---

1 ஆம் மாத நினைவஞ்சலி

கார்மேகம் சண்முகராஜா (ரவி)

கோண்டாவில்

மண்மீது ஜனனம்	மண்மீட்புக்காய் மரணம்
20 - 5 - 1967	9 - 3 - 1988

சீரான வதனமும்
பணிவான மென்
பார்வையும்
துணிவானவுன் சேவையும்
சாந்தி சூடிகொண்ட நின்
அன்பு மனமும்
கனிவான தமிழ் மீது
துணிவான அபிமானமும்
துயரீயவருகின்ற
தார்பரனைப் போக்கியே
போர்கண்ட வேங்கைவீரா
தளராத உன் வீரம்
தமிழ் உள்ளம் என்றும் மறவாத

நண்பர்கள்

---

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

க. அருளானந்தம்

தோற்றம்	திதி	மறைவு
6-11-1942	9-4-1988	2-4-1986

சொல்லறம் அன்பினாலே
சுற்றத்தோர் மதிக்க வாழ்ந்தீர்
நல்லவை அனைத்தும் செய்து
பொதுநலம் பேணிக் காத்தீர்
கண்ணியம் கட்டுப்பாடாய்க்
கடமைகள் செய்திருந்தீர்
விளையாட்டுத் துறையினிலே
விவேகியாய் விளங்கினீரே
கோவில் தொண்டு செய்து
கோபுரமாய் உயர்ந்து நின்றீர்
இல்லற வாழ்க்கையிலும்
நல்லறம் பேணிக் காத்தீர்
பழகுவோர் நெஞ்சம் தன்னில்
பண்பாக இடம் பிடித்தீர்
இன்பமுடன் வாழ்ந்துவிட்டு
இறைவனடி சேர்ந்துவிட்டீர்
ஆண்டுகள் இரண்டானாலும்-எம்மனதில்
அழியாது இருக்கின்றீரே.

தங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மகள்,
உற்றார், உறவினர்.

''விஜயபதி''
இளவாலை வடக்கு,
இளவாலை.

(2443)

★ வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க ★

தோலகட்டி
நெல்லிரசம்

AVE MARIA

தவிர்க்கமுடியாத காரணங்களால் ஒரு சில மாதங்களாக விநியோகிக்கப்படாமல் இருந்த

தோலகட்டி நெல்லிரசம்
இப்போது வந்துவிட்டது

போலிகள் பல உருவாகியுள்ளன என அறிந்து வருந்துகிறோம். தற்போதைய எமது லேபலின் நடுவில் மேலே காணப்படும் தோலகட்டி முத்திரை பதிக்கப்பட்டுள்ளது என்டதையும் அறியத்தருகிறோம்.

வியாபாரிகளுக்கு
மொத்த விலை— 26 00
சில்லறை விலை—28 50

அதிபர்
அருள் ஆச்சிரமம்
5, ரெப்பிள்ரோட்
யாழ்ப்பாணம்.

அதிபர்
தோலகட்டி ஆச்சிரமம்,
வசாவிளான்

★ நீங்கள் விரும்பும் புதியபாடல்கள்
வெளிவந்துள்ளன

★ நீங்கள் விரும்பும் புதிய, பழைய பாடல்களை பதிவு செய்து கொள்ள இன்றே நாடவேண்டிய ஸ்தாபனம்

விக்ரர் அன் சன்ஸ்
இல 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

★ ★ ★

★ உங்கள் மின்சார உபகரணங்களையும்
★ றேடியோ மணிக்கூடுகள் யாவற்றையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள

VICTOR & SONS
No. 100, Stanley Road,
JAFFNA

31ஆம்நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் பீலிக்ஸ்போல் (நேசராசா)

அன்னையின் மடியில்
1938-03 08
ஆண்டவன் அடியில்
1988-03-11

அன்புத் தெய்வமே!

நோயென்று கருதாமல் கடமையே பெரிதெனக் கருதி, படுக்கையாயிராது, எமையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு, ஆண்டவன் அழைப்பை ஏற்றுவிட்டீரே!

நேசமே, இராசா!!

நீர் இல்லாத எமதில்லம் ஒளிதனை இழந்ததய்யா! எம்முடன் கதைத்துச் சிரித்ததெல்லாம் எம்காதில் ஒலிக்குதய்யா!! நாட்கள் மறையலாம், வருடங்கள் ஆகலாம், என்றுமே உங்கள் பிரிவை நாங்கள் மறக்கவே முடியாது.

அன்னாரின் பூதவுடலை நாம்கண்டு ஆறுதலடைய எல்லா உதவிகளையும் செய்து தந்த மன்னார் சமநலசேவை உத்தியோகத்தர் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச் செய்திகள் தெரிவித்தும், எங்கள் துன்பங்களிற் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு 31ஆம் நாள்கிரியைகள் 10-04-1988 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுமாதலால் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மா பரலோகத்தில் சாந்தியடையப் பிரார்த்திக்கும்படி வேண்டுகின்றோம்.

இல. 16, பற்றிமா அவனியூ,
மிருசுவில்.

பிரிவால் துயருறும்,
அன்புமனைவி, தந்தை தாய், மாமி,
சகோதரர், மைத்துனர் மருமக்கள்,
உறவினர், ஞானப்பிள்ளைகள்
(2723)

மலிவு விற்பனையும், பரிசுப்
பொருட்களும்
14-04 88 மானிப்பாய் ஆலய
முன்றலில்

மேற்படி ஆலய முன்றலில் 'சப்வாங்' சூப்பர் குஸ்ரிக்கர் பொலித்தீன் விதைப்பைகள் இலவச பிரசுரங்கள் வழங்கப்படும். [illegible] வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

மில்க்வைற்-யாழ்ப்பாணம்

சஞ்சீவி

09-04-1938 சனிக்கிழமை

மலிவு விற்பனையும், பரிசுப்
பொருட்களும்

11-04-88 [illegible] ஆலய முன்றலில் 'சப்வாங்' சூப்பர் குஸ்ரிக்கர், பொலித்தீன் விதைப்பைகள், இலவச பிரசுரங்கள் வழங்கப்படும். [illegible] வைத்திருப்போர் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற்-யாழ்ப்பாணம்

தேவை

யாழ்ப்பாணம், சென். ஜோன்ஸ் கல்லூரியிலிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

1. பட்டதாரி ஆசிரியர்:

தகைமை:- பௌதிகம், தூயகணிதம், பிரயோககணிதம் அல்லது இரசாயனம், பௌதிகம், கணிதம்

2. ஆரம்பப் பாடசாலையில் ஆங்கிலம், மேலைத்தேச இசை ஆகிய பாடங்களைக் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்.

தகைமை:-க. பொ. த உயர்தரப்பரீட்சையில் மூன்று பாடங்களுக்குக் குறையாமல் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

தகைமையுடையோர் 15-04-1988க்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்
சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

வன்செயல்களின்போது

வீடுகளை இழந்தவர்களுக்கு
நிதி மற்றும் உதவிகள்

திட்டம் தயாராகிறது

கொழும்பு, ஏப்.9

வன்செயல்களினால் வீடிழந்த சுமார் ஒருலட்சத்து பத்தாயிரம் குடும்பங்களுக்கு நிதி மற்றும் உதவிகள் வழங்கப்படும்

இதற்கான திட்டம் ஒன்றை தேசிய புனர்நிர்மாண வழிநடத்தும் கமிட்டி (National Reconstruction Steering Committee) தயாரித்துள்ளது

இத்திட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

தீவு முழுவதிலும் வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட சகலரும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.

வழங்கப்படும் நிதி மற்றும் உதவிகள் பற்றிய விபரங்கள் வருமாறு;

★ மாத வருமானம் எழுநூறு ரூபாவுக்கு உட்பட்ட ஒருவருக்கு 15 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்படும்

பாதிக்கப்பட்டவர்களில் 60 சதவீதமானோர் இவ் வருமானம் பெறுபவர்களே.

★ மாத வருமானம் 701 ரூபாவுக்கும் 1 500 ரூபாவுக்கும் இடைப்பட்டவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கப்படும். அத்துடன் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 15 ஆயிரம் ரூபா கடனாக வழங்கப்படும்.

★ அதிக வருமானம் பெறுபவருக்கு தேசிய வீடமைப்பு அதிகார சபை, இலங்கை வங்கி, தேசிய அடமான முதலீட்டு வங்கி ஆகியன குறைந்த வட்டியில் கடன் வழங்கும்

இச்சலுகைக் கடன் பெறுபவர்களின் வருமானம் 1501 ரூபாவுக்கும் 2,500 ரூபாவுக்கும் இடைப்பட்டதாகவும்.

2,501 ரூபாவுக்கும் 5 000 ரூபாவுக்கும் இடைப்பட்டதாகவும் இருக்க வேண்டும்

5 ஆயிரம் ரூபா வருமானத்துக்கு அதிகமாக பெறுபவரும் இக்கடனைப் பெறமுடியும்.

(ஒ-எ)

காணாமற்- - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை செய்தது. பின்னர் அவர்கள் காணாமற்போய்விட்டனர். நியாயமான முறையில் இது பற்றி ஆராயப்பட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்

மத்துகம எம். பி. அனில் முனசிங்க பேசுகையில் சொன்னதாவது:

பொலிஸ் நிலையக் கைதிக் கூண்டில் அடைக்கப்படுபவர் நிமோனியாக் காய்ச்சல் வந்து இறக்கும் காலத்தில் நாம வசித்து வருகின்றோம்

இன்றைய சூழ்நிலையில் பலரின் மறைவுக்குக் காரணம் கூறமுடியாதிருக்கின்றது என்று சொன்னார். (அ-எ)

நாளை நூல் வெளியீட்டு விழா

கிளிநொச்சி, ஏப் 9

சைவப்புலவர் குமாரசுவாமியால் எழுதப்பட்ட நாராயணமாலை'' நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி குருநகர் திருமால் ஆலயத்தில் நடைபெறும். [ஒ-76]

வாந்தி - - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அண்மையில் ஊர்காற்துறை, கோப்பாய் பகுதியில் தலா ஒருவர் வீதம் வாந்திபேதியால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அவற்றைத் தவிர வேறு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ 9)

புதியன..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

புதிய ஆண்டில் புதியன செய்திட உழைத்திடுவோம்.

அதேவேளை, பழைய ஆண்டு தந்த படிப்பினைகளை மறந்திடாமல், அவைகளை நல்வழிக்குத் திருப்பிச் செல்லும் மூலைகளாகக் கொள்வோம்.

சித்திரை நல்லாளே, இந்த வருடம் முழுவதும் நகையைப் பூத்து நில்லடி கண்ணே! நம மனம் மகிழ்ச்சியில் திளைத்திட மனம் வையடி பெண்ணே!

ஆலோசனைக் கூட்டம்

குருநகர், மார்ச் 9

சமூக அபிவிருத்தி யாழ் மாவட்ட சபையின் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது. (ஒ-51)

இன்று

கொடிகாமம், ஏப்.9

சாவகச்சேரி உதவி அரச அதிபர் பகுதியை உள்ளடக்கிய பிரஜைகள் குழு அமைப்புக் கூட்டம் இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கூட்டத்தில் அப்பகுதி மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-க-75)

கிளிநொச்சி - - - -

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களத்துக்கும் அறிவித்துவிட்டோம்.

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இப்பரீட்சை டிசம்பரில் நடத்தப்பட்ட போதிலும் இங்குள்ள சிலபகுதிகளில் பரீட்சை தடைப்பட்டது. (இ-க-9)

அமரர் ச. குமாரலிங்கம் அவர்களின்

ஓராண்டு பூர்த்தி அஞ்சலி

தோற்றம்:
29 - 9 - 1926

மறைவு:
22 - 3 - 1987

ஆண்டொன்றெனக் கழிந்தாலும் அப்பா பூண்ட அன்பின் மாண்பும் தாக்கமும் காலத்தாலும் தூரத்தாலும் அழிந்து படாது அத்தனை பதிந்து மனத்தினை அழுந்தித் தளிர்க்கும்; இனத்தைத் துலக்கி இனிதே எழுந்து பரந்து படர்ந்து சுற்றஞ் சூழ விரைந்து வீசிடு மாருதஞ் சேர நிழல் தரு சோலையை நிகர நிற்குமே!

அன்பின்
மனையாள், பிள்ளைகள்,
மருமக்கள். பேரன்,
உற்றார், உறவினர்கள்.

47, கண்டி வீதி,
யாப்பாணம்.

[2345]

யூனிவேர்சல்

கந்தர்மடம்—யாழ்ப்பாணம்

A/L — 90

தாவரவியல்

ஆசிரியர்:

ஐங்கரநேசன், பொ.

அரம்பம்:
9-4 88 காலை 6 30

[2305]

யாழ்நகரில் புதியதோர் ஜவுளி உலகம்

சிந்து பைரவி
SINTHU BHIRAVI

- திருமண பட்டுப்புடவைகள்
- இறக்குமதி செய்யப்பட்டசாறி சமுத்திரத்தில்

★ எமரல்ட் குயின்
★ சித்திரா
★ ருவிங்கிள் குவீன்
★ சுப்பர் மைக்றோ
★ சிங்கோ ஸ்ரார் கொலெக்ஷன்
★ சோனியா கொலெக்ஷன்
★ லேடி கமில்டன்
★ சாறி குயின்
★ பூணம்
★ நதியா கொலெக்ஷன்
★ பான்ஸி சற்றின்
★ கோயிங் எவே
★ கிரியோ பெற்று
★ தீரா ★ அபலா

ஆண், பெண்களுக்குரிய அனைத்து மில் ஜவுளிகளும் நிதான விலையில் கிடைக்கும் புதியதோர் நிறுவனம்

சிந்து பைரவி
No 48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்

UNIVERSITY
OF
JAFFNA
Sri Lanka

Applications will be received by me from suitable candidates for the following posts up to 9th May, 1988.

TEMPORARY RESEARCH ASSISTANT IN ZOOLOGY.

SENIOR LECTURER / LECTURER / ASSISTANT LECTURER IN CHEMISTRY AND BOTANY.

LECTURER/ASSISTANT LECTURER IN MATHEMATICS & STATISTICS AND PHYSICS.

ASSISTANT LECTURER IN ZOOLOGY.

Application forms and particulars for the above posts may be obtained from this office.

Request for application forms for the above posts should be accompanied by a self - addressed stamped envelope of 23 x 10 c. m. in size.

REGISTRAR

University of Jaffna,
Sri Lanka
Thirunelvely,
Jaffna.

ஹரன் வெண்திரையில்

அடுத்த வாரிசு

தவிர்க்க முடியாத காரணத்தினால் சில தினங்கள் மட்டுமே காண்பிக்கப்படும்.

(2340)

6ஆம் மாத நினைவஞ்சலி

சுவாமிநாதர் தம்பிஐயா

(யா/யூனியன் கல்லூரி ஓய்வுபெற்ற காவலாளி)

தோற்றம்: 05-06-1928
மறைவு: 15-10-1987

எங்கள் இல்லத்தின் தெய்வமாகத் துலங்கி எங்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் நின்று எம்மால் மறக்கமுடியாதவாறு உமது பாசத்தால் எம்மைப் பிணித்து நின்ற தெய்வமே எம்மை நட்டாற்றில் விட்டு, ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயிலில் அகால மரணம் அடைந்தாயே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள் உயிருள்ள வரைக்கும் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மகள், மகன்,
சகோதரர்கள், பேரப்பிள்ளை.
மாமி, மருமக்கள், பெருமக்கள்,
மைத்துனிமார்.

9ஆம் திகதி (இன்று) நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம

[illegible],
[illegible],
கன்னாதிட்டி

(2779)

நீத்தார் பட்டியல்

பிச்சாண்டி தம்பு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிச்சாண்டி தம்பு (யாழ் மாநகர சபை) காலமானார். இவர் நாகமுத்து (தங்கச்சியம்மா) அவர்களின் அன்புக் கணவரும், சிவலிங்கம், திருநாவுக்கரசு (மக்கள் வங்கி ஊர்காவற்றுறை) சந்திரா, சரோஜா, ஜெயராணி, மகாராஜா, சந்திரலேகா, தேவகி ஆகியோர்களின் அன்புத் தந்தையும், வவருணி, சகுந்தலாதேவி, தேவிகா, துரைசிங்கம், (முன்னாள் மாநகரசபை ஊழியர்), விமலராசா, தருமகுலசிங்கம் (சவூதி), சாந்தி உதயகுமார், மகேந்திரன், ஆகியோர்களின் அன்பு மாமனும், கிருஷ்ணன், காலஞ்சென்ற மார்க்கண்டு, சண்முகம், நாகம்மா, இலட்சுமி செல்லம்மா, இராசம்மா, இராசமணி ஆகியோர்களின் அன்புமைத்துனரும், பசுபதி, பொன்னம்பலம், காலஞ்சென்ற பூரணம், மாரிமுத்து, குமாரன், காலஞ்சென்ற பிள்ளையம்மா ஆகியோர்களின் அன்புச் சோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஈமைக்கிரியைக்காக 9-4-88 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் 43/2 மடம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொட்டடி வில்லூன்றி மயானத்தில் தகனம் செய்யப்படும

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள். நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. துரைசிங்கம்.

[2348]

அந்தோனிப்பிள்ளை ஆசிர்வாதம்

இவர் இலங்கைத் துறைமுக அதிகார சபையில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றியவரும், நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொழும்பு மேட்டுத் தெருவில் வசித்தவருமாவர்

இவர் காலஞ்சென்ற அந்தோணிப்பிள்ளை அற்புதம் தம்பதிகளின் அன்பு மகனும் பிலோமினம்மாளின் அன்புக் கணவரும். கிறேஷியன் (ஜேர்மனி) அன்ரனி (கனடா) ஜோர்ஜ் (நோர்வே) ஜோன்சன் (ஜேர்மனி) நிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோஸ்லதா (ஜேர்மனி) அன்பு மாமனாரும் வோல்ட்டர் ஜெமியின் அன்பு பேரனும் பாலிலு ரூசைமேரி தம்பதிகளின் அன்பு மருமகனும் செபமாலை (பாக்கியம்) அழகம்மா, திரேசம்மா, ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆசைமுத்து. சின்னத்துரை, ஆசிர்வாதம், ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிளாரு. கிறிஸ்ரீனம்மா: பத்திநாதர், ஆகியோரின் அன்பு மைத்துனரும், அந்தோனிப்பிள்ளை அருமை ஆகியோரின அன்புச் சகலனும் இராஜேஸ்வரியின் அன்பு மைத்துனருமாவார் அன்னாரின் பூதவுடல் 9-4 88 சனிக்கிழமை மாலை 3 மணியளவில் நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி
நாரந்தனை வடக்கு
ஊர்காவற்றுறை

(2774)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 9-04-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2. Navaler Road, Jaffna on Saturday, 9th April 1988.